பக்கங்கள்:-பத்து

Registered as a News paper in Sri Lanka

விலை ரூபா. 6.00

ஆசியா கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது

ராம்கோ சீமெந்து

MADRAS CEMENTS LTD

# வலம்புரி

The Valampuri

சங்கு 04 | வள்ளுவர் ஆண்டு 2034 | ஆவணி01 | திங்கட்கிழமை | (18.08.2003) | தொலைபேசி - 2223378 | ஒலி 242

## முஸ்லிம்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படாவிட்டால்

# அரசுக்கு வழங்கிவரும் ஆதரவை விலக்குவோம்

## அமைச்சர் ஹக்கீம் பேட்டி



(நமது நிருபர்)

**இந் நாட்டில் வாழுகின்ற முஸ்லிம்களின் பாதுகாப்புச் சம்பந்தமாக எமது கட்சியின் உச்சக் கட்ட அதிகாரத்தைப் பயன்படுத்தி அரசுக்கு அழுத்தம் கொடுக்கவுள்ளோம்.**

**அதேவேளை, தேர்தல் ஒன்று தற்போது வருமானால் அரசுடன் புதிய ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொண்டே போட்டியிடுவோம் இவ்வாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவுப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.**

நேற்று முன் தினம் மூதூர்ப் பிரதேசத்தில் வைத்து முஸ்லிம் தந்தையும் தனையனும் கடத்தப்பட்டு விடுவிக்கப்பட்டது தொடர்பாக பி.பி.ஸிக்கு அளித்த் பேட்டியிலேயே அமைச்சர் ஹக்கீம் மேற் கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அப் பேட்டியில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது;

மூதூர்க் கடலில் தொழிலில் ஈடுபட்ட இரு முஸ்லிம்களும் தமிழீழ விடுதலைப் புலிகளால் கைது செய்யப்பட்டு புலிகளின் பிரதேசத்துக்குள் கொண்டு செல்லப்பட்டபின் படுமோசமான முறையில் தாக்கப்பட்ட பின்னரே விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.இது மிகவும் வேதனைக்குரிய விடயமாகவுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழுவிடம் முறையிட்டதுடன் புலிகளின் இத்தகைய மனித உரிமை மீறல் தொடர்பான விடயங்களை ஆவணப்படுத்தி அதனை ஓர் அறிக்கையாக வெளியிட வேண்டும் என்றும் அவர்களிடம் வற்புறுத்திக் கூறியுள்ளோம் அத்துடன்,நடுவுநிலை வகிக்க

(10ம் பக்கம் பார்க்க)

## அமைச்சர் ஹக்கீம் இன்று பிரதமருடன் சந்திப்பு

(கொழும்பு)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் இன்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவை சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

இச்சந்திப்பின் போது கிழக்கு மாகாணத்தில் தற்போது ஏற்பட்டுள்ள பதற்ற நிலை குறித்தும் அங்கு மேற்கொள்ள வேண்டிய பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்தும் பிரதமருடன் விரிவாக ஆராயவுள்ளார்.

இதேவேளை பொது மக்களின் பாதுகாப்பிற்காக மூதூரில் உள்ள நாவலடியில் இராணுவக் காவலரண ஒன்றை அமைக்கும்படி அமைச்சர் ஹக்கீம் பாதுகாப்புப் படை அதிகாரிகளைக் கேட்டுள்ளார். (த-5)

## கொழும்பில் நேற்றும் சுற்றிவளைப்பு 94 பேர் கைதாகினர்

(கொழும்பு)

கொழும்பில் நேற்று இரண்டாவது நாளாக நடைபெற்ற சுற்றிவளைப்பு தேடுதல்களின் போது 94பேர்கைது செய்யப்பட்டுள்ளதாக கொழும்பு மாவட்டப் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அலுவலகம் அறிவித்துள்ளது.

இத் தேடுதல், சுற்றிவளைப்பு நடவடிக்கைகளில் பொலிஸாரும், இராணுவத்தினரும் இணைந்து செயற்பட்டதாகவும் அந்த அலுவலகம் மேலும் தெரிவித்துள்ளது.(வ)

## தமிழக மீனவர்கள் 55 பேரை நெடுந்தீவு மீனவர் பிடித்தனர்

(நெடுந்தீவு)

நெடுந்தீவுக் கடற்பரப்பினுள் அத்துமீறி நுழைந்து கடற்றொழிலில் ஈடுபட்டுக்கொண்டிருந்த 55இந்திய மீனவர்கள் நெடுந்தீவு மீனவர்களால் பிடிக்கப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் மாலை 5.30 மணிமுதல் இரவு 11 மணி வரை நெடுந்தீவு மீனவர்கள் மேற் கொணட சுற்றி வளைப்பிலேயே 55 இந்திய மீனவர்களும் பிடிக்கப்பட்டனர்.

அவர்களது 15 மீன்பிடிப்படகுகளும் கைப்பற்றப்பட்டு கரைக்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

மாலை 5.30 மணியளவில் கடலுக்குச் சென்ற மீனவர்கள் இந்திய மீனவர்களின் 12 படகுகளையும் 37 மீனவர்களையும் முதலில் பிடித்தனர்.

இதனைத் தொடர்ந்து 11 மணியளவில் மேலும் மூன்று படகுகளும் 18 மீனவர்களும் பிடிக்கப்பட்டனர்.

இவ்வாறு பிடிக்கப்பட்ட 55 இந்திய மீனவர்களும் ஊர்காவற்றுறைப் பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.இவர்களைப் பொறுப்பேற்ற பொலிசார் அவர்களை மகாவலி துறைமுகத்தில் நேற்றிரவு வரை தங்கவைத்தனர்.

பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்ட 55 மீனவர்களும் இன்று ஊர்காவற்றுறை நீதிமன்றில் ஆஜர் படுத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (த-42)

## பிரான்ஸ் செல்வதற்காக சு.ப.தமிழ்ச்செல்வன் நாளை கொழும்பு பயணம்

(வவுனியா)

இடைக்கால நிர்வாகத் திட்ட வரைபு தொடர்பாக சட்ட வல்லுநர்களுடன் கலந்துரையாடுவதற்கு பிரான்ஸ் தலைநகர் பாரிஸ் செல்வதற்காக அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்செல்வன் தலைமையிலான 10 பேர் அடங்கிய குழு நாளை கொழும்பு செல்கின்றது. கொழும்பு செல்லும் இவர்கள் 20ந் திகதி அதிகாலை பாரிஸிற்கு பயணமாவார்கள்.

இரண்டு வாரங்கள் பாரிஸில் தங்கியிருந்து இடைக்கால நிர்வாகம் தொடர்பாக ஆராய்ந்த பின்னர் செப்ரெம்பர் முதல் வாரத்தில் இவர்கள் நாடு திரும்பவுள்ளனர்.

நாடு திரும்பியதும் இடைக்கால நிர்வாக திட்ட வரைபு குறித்து

(10ம் பக்கம் பார்க்க)

## தமிழர் விடுதலைக் கூட்டணியை தமிழ்ச்செல்வன் சந்திக்கவில்லை

(நமது நிருபர்)

இடைக்கால நிர்வாக சபை தொடர்பாக தமிழ்த் தேசிய கூட்டமைப்புக் கட்சிகளின் தலைவர்களுடன் விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ள போதும், கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களை இதுவரை அழைத்துப் பேசவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைபில் அங்கம் வகிக்கும் அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ், ரெலோ, ஈ.பி, ஆர்.எல்.எவ்(சுரேஸ் அணி) ஆகிய கட்சித் தலைவர்களை அழைத்து சு.ப.தமிழ்ச்செல்வன் பேச்சுக்கள் நடத்தியுள்ளார்.

(10ம் பக்கம் பார்க்க)

## புலிகளின் பணிமனை படையினரால் தீக்கிரை

(மட்டக்களப்பு)

அம்பாறை மாவட்டத்தில் உள்ள கோமாரி ஆலங்குளத்தில் அமைந்துள்ள விடுதலைப் புலிகளின் பாவனைக்குரிய பணிமனை ஒன்று நேற்றுக் காலை விசேட அதிரடிப் படையினரால் தீக்கிரையாக்கப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகளினதும் மக்களினதும் உறவு மையமாக அமைந்திருந்த இந்தப் பணிமனை தீக்கிரையாக்கப்பட்டபோது அங்கு எவரும் இருக்கவில்லை.

சிறப்பு அதிரடிப்படையைச் சேர்ந்த 200 பேர் இச்சம்பவத்தில் ஈடுபட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தீ வைக்கப்பட்டதை கேள்வி

(10ம் பக்கம் பார்க்க)

## மனிதவுரிமை மீறல் பற்றி ஆராய

## சர்வதேச மனிதவுரிமைகள் குழு அடுத்தவாரம் இலங்கை வரும்

(கொழும்பு)

சர்வதேச மனிதவுரிமைகள் அமைப்பின் பிரதிநிதிகள் குழுவொன்று அடுத்தவாரம் இலங்கை வரவுள்ளது.

இலங்கை வரும் இக் குழுவினர் மனிதவுரிமை மீறல் முறைப்பாடுகள் பற்றி விரிவாக ஆராயவுள்ளனர்.

அதேவேளை இக்குழுவினர் கிளிநொச்சிக்கும் சென்று விடுதலைப் புலிகளுடன் மனிதவுரிமைகளை பேணுதல் தொடர்பாக கலந்துரையாடவுள்ளனர்.

அண்மைக் காலமாக இடம் பெற்று வரும் படுகொலைகள் குறித்து இவர்கள் அதிக கவனம் செலுத்தவுள்ளதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை விடுதலைப் புலிகளுடனான சந்திப்பின் போது யுத்த நிறுத்த உடன்படிக்கைக்கு அமைவாக செயற்பட்டு மனிதவுரிமைகளைப் பேணுமாறு வலியுறுத்தப் போவதாக சர்வதேச மனித உரிமைகள் அமைப்பின் பிரதிநிதி ஒருவர் தெரிவித்துள்ளார். (த-5)

## தேர்தலுக்கு எந்நேரமும் தயாராகுங்கள் கட்சிக்காரர்களுக்கு பிரதமர் அறிவிப்பு

(கொழும்பு)



தேர்தல்கள் எப்பொழுது நடத்தப்பட்டாலும் அதனை எதிர் கொள்வதற்கு ஆயத்த நிலையில் இருக்குமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா கட்சியின் அமைப்பாளர்களையும் தலைவர்களையும், எம்.பிக்களையும் கேட்டுள்ளார்.

பதவிக் காலம் முடிவடையவுள்ள மாகாண சபைகளைக் கலைத்து விட்டு அவற்றுக்கான தேர்தல்களை நடத்தி ஒத்திகை பார்த்த பின்னர் பாராளுமன்ற தேர்தலை நடத்துவதற்கு ஜனாதிபதி திட்டமிட்டு இரகசியமான முறையில் நடவடிக்கைகளை மேற் கொண்டு வரும் இந் நேரத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா இந்த அறிவித்தலை விடுத்துள்ளார்.

இந்த அறிவித்தலில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா மேலும் தெரிவித்திருப்பதாவது; நாட்டின் ஜனாதிபதி தேர்தல் ஆனாலும் சரி, மாகாண சபைகளுக்கான தேர்தல்கள் ஆனாலும் சரி பாராளுமன்றத் தேர்தல் ஆனாலும் சரி எதனையும் ஐக்கிய தேசியக் கட்சி சந்திப்பதற்குத் தயாராகவுள்ளது.

வடக்கு கிழக்கு மாகாணங்களின் புனரமைப்புக்காக உலக நாடுகள்

(10ம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# வெற்றியை நோக்கி நகரும் இராணுவக் கழகம்

இலங்கை கால்பந்தாட்டக் கழகம் நடாத்திவரும் 15முன்னணி கழகங்களுக்கு இடையிலான 2003, 2004ஆம் ஆண்டுகளுக்கான பிறீமியர் லீக்கால்பந்தாட்டப் போட்டிகளில் இராணுவக்கழகம் தொடர்ந்தும் முன்னிலையில் உள்ளது.

இதுவரை நடந்து முடிந்த 65 முதல் சுற்று போட்டிமுடிவில் இராணுவக்கழகம் தனது பத்துப் போட்டிகளில் ஐந்து போட்டிகளில் வெற்றி பெற்றதுடன், ஐந்து போட்டிகளில சமநிலையடைநதுள்ளது. இதன் அடிப்படையில் 20 புள்ளிகளைப் பெற்று கழகங்கள் நிலையில் தொடர்ந்தும் முன்னிலையில் உள்ளது.

களுத்துறை புளூஸ்ரார் கழகம் தான் பங்கு பற்றிய ஒன்பது போட்டிகளில் ஆறுவெற்றிகள், மூன்று தோல்விகள் என்ற நிலையில் 18புள்ளிகளைப் பெற்று இரண்டாம் இடத்திலுள்ளது.

நடப்பு பிறீமியர் லீக் சம்பியனான நீர்கொழும்பு யுத்கழகம்பத்துப் போட்டிகளில் ஐந்தில்வெற்றி பெற்றதுடன், மூன்றில் தோல்வியடைந்தும், இரண்டில் சமநிலையை ஏற்படுத்தி 17 புள்ளிகளைப் பெற்று மூன்றாம் இடத்திலுள்ளது.

பொலிஸ்கழகம் தான் பங்கு கொண்ட ஒன்பது போட்டிகளில் ஐந்தில் வெற்றிபெற்று, மூன்றில் தோல்வியடைந்ததுடன் ஒரு போட்டியில் சமநிலையையும் ஏற்படுத்தி 16புள்ளிகளைப் பெற்று நான்காம் இடத்திற்கு முன்னேறியுள்ளது.

15புள்ளிகளைப் பெற்றுள்ளயாவாலேன்கழகம் நான்கு வெற்றிகள், இரண்டு தோல்விகள்,மூன்று சமநிலையுடன் ஒன்பது போட்டிகளில் விளையாடி ஐந்தாம் இடத்திலும் உள்ளது.

இரட்ணம்கழகம் 15புள்ளிக ளுடனும். விமானப்படை 14புள்ளிகளுடனும், ஒல்ட்பென்ஸ்கழகம்12 புள்ளிகளுடனும், கடற்படைக்கழகம், யுப்பீற்றஸ் கழகம், சவுண்டஸ் கழகம் என்பன தலா9புள்ளிகளுடனும் அடுத்த ஆறு இடங்களை வகிக்கின்றன.கடைசி நான்கு நிலைகளையும் மாத்தறை, றினோன், ஹைலன்ட் மற்றும் விக்ரரி ஆகிய கழகங்கள் வகிக்கின்றன.

இப் பிறீமியர் லீக் போட்டிகளின் முதல் சுற்று 105போட்டிகளைக் கொண்டதாகும்.தற்போது65போட்டிகள் நிறைவடைந்துள்ள நிலையில் மேலுமுள்ள 40போட்டிகளிலும் சிறப்பாக செயற்படும் அணிகள் தங்களது நிலைகளை மாற்றிக் கொள்ள முடியும் என எதிர்பார்க்கப்படுகின்றது. பொதுவாக ஒவ்வொரு அணிக்கும் தலா ஐந்து அல்லது ஆறு போட்டிகள் இன்னும் இருப்பது இங்கு குறிப்பிடத் தக்கது. (உ-68)

# நட்சத்திர சுழல்பந்து வீச்சாளரின் அந்தப்புர ரகசியங்கள் கசிவு

அவுஸ்ரேலிய கிரிகெற் அணியின் நட்சத்திர சுழல்பந்து வீச்சாளரான சேர்ன்வோன் அவுஸ்ரேலியாவின் பிரபல நடனத்தாரகை ஒருவருடன் தவறான தொடர்பு வைத்திருக்கின்றார் என அவுஸ்திரேலிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்தத்தொடர்பு பற்றிய விடயங்களை செய்தி ஊடகங்களின் மூலம் வெளியிடப் போவதாக 38 வயதான அந்த நடனத்தாரகை தெரிவித்திருககின்றார்.

சுழல் பந்து வீச்சாளர் சேர்ன் வோன் ஏற்கனவே தென்னாபிரிக்க பெண்ணொருவரின் பாலியல் குற்றச்சாட்டிற்கு ஆளாகியிருப்பது பற்றி ஊடகங்களில் அண்மையில் செய்தி வெளியாகியிருந்தது. இதற்கு முன்னர் லண்டனில் உள்ள தாதி ஒருவரிடமும் தகாத முறையில் நடந்து கொண்டார் என இவர் மீது குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.

அண்மையில் தென்னாபிரிக்க பெண்ணொருவருக்கு தொலைபேசி மூலம் ஆபாச அழைப்பு விடுத்தார் என்ற குற்றச்சாட்டுக்கள் இவர் மீது எழுந்துள்ள நிலையில் இதனை முற்றாக மறுத்துள்ளார்.

பாடசாலை மாணவியான 17 வயதுடைய அலீசாபிளாக் தன்னை விரும்பத்தகாத முறையில் சேர்ன் வோன் முத்தமிட்டதாக மெல்போர்ன் நீதிமன்றில் ஆஜராகி வாக்குமூலம் அளித்திருக்கின்றார்.

இந்நிலையில் தொடர்ந்தும் பெண்களின் பாலியல் குற்றச்சாட்டுக்கள், மற்றும் விமர்சனங்களினால் அதிகம் பாதிக்கப்பட்டு இருக்கும் சேர்ன்வோனின் கிரிக்கெற் எதிர்காலம் கேள்விக் குறியாகியுள்ளது. ஊக்கமருந்தினைப் பாவித்தார் என்ற குற்றச்சாட்டின் தண்டனைகளில் இருந்து சற்று தளர்ந்து அண்மையில் தான் உள்ளூர் போட்டிகளில் விளையாட சேர்ன்வோனுக்கு அவுஸ்ரேலிய கிரிக்கெற் கட்டுப்பாட்டுச் சபை அனுமதியளித்திருந்தது.

இந்நிலையில் தொடர் சர்ச்சைகளில் இருந்து சேர்ன் வோன் எப்போது விடுபடுவார் என்று அவுஸ்ரேலிய கிரிக்கெற் ரசிகர்கள் மிக ஆவலாக உள்ளனர். (உ-68)

# ஒல்ட்பிளைக் கிண்ணத்தை சுவீகரித்த நியூ.அணி

அவுஸ்ரேலியா, நியூசிலாந்து மற்றும் தென்னாபிரிக்க அணிகள் கலந்து கொண்ட முக்கோண றகர் போட்டித் தொடரில் நியூசிலாந்து அணி ஒல்ட்பிளைக் கிண்ணத்தை சுவீகரித்து சம்பியன் பட்டத்தை வென்றுள்ளது. 1997ஆம் ஆண்டிற்குப் பின்னர் நியூசிலாந்து அணி மீண்டும் வெற்றி பெற்றுள்ளது.

கொக்லாண்டில் நடைபெற்ற இறுதிப்போட்டியில் ஆட்டம் ஆரம்பமாகி இரண்டாவது நிமிடத்திலேயே அவுஸ்திரேலிய அணி தண்டனை அடி மூலமாக புள்ளிகளைப் பெறத் தொடங்கியது. இதனை அடுத்து நியூசிலாந்து வீரர்கள் கோல்கள் மூலம் புள்ளிகளைப் பெற்றனர். விறு விறுப்பாக நடைபெற்ற இப் போட்டியின் இறுதியில் 21:17 என்ற புள்ளிகள் அடிப்படையில் நியூசிலாந்து அணி வெற்றி பெற்றுக்கொண்டது.

இச்சுற்றுப்போட்டியின் ஆரம்பத்தில் தொடர் தோல்விகளை சந்தித்து வந்த அவுஸ்ரேலிய அணி இறுதிப் போட்டிக்கு தெரிவாகுமா? என்ற நிலையில் இருந்த போது அடுத்த கட்ட போட்டிகளில் சிறப்பாக ஆடி தென்னாபிரிக்க அணியை விட கூடுதலான புள்ளிகளைப் பெற்று இறுதிப் போட்டிக்கு தெரிவானது. ஆயினும் தொடர்ந்தும் முன்னணியில் திகழ்ந்த நியூசிலாந்து அணியை வெற்றி கொள்ள முடியவில்லை. (தி)

## பாகிஸ்தான் அணியில் ஏழு புதுமுகங்கள்

(யாழ்ப்பாணம்)

பங்களாதேஷ் அணிக்கெதிராக அடுத்தவாரம் ஆரம்பமாகவுள்ள முதலாவது கிரிகெற் டெஸ்ட் போட்டியில் பாகிஸ்தான் அணியில் ஏழு புதிய முகங்கள் இணைக்கப்பட்டுள்ளதாக பாகிஸ்தான் கிரிகெற்கட்டுப்பாட்டுச்சபை அறிவித்துள்ளது.

இந்த அணியில் ''இன்ஷாமாம் உல் ஹக்''கும் சேர்ந்துக் கொள்ளப்பட்டுள்ளார்.

இதற்கமைய ''ரஷ்சீவ்லதீப்'' தலைமையிலான அணியில் ''யூசுப் ஜொஹனா'',சொயீப்அத்தர்,சொயீப் மலிக்,இன்ஷமாம் உல்ஹக் ஆகியோருடன் முகமட்ஹபிஸ், தௌபீக உமர், யசீர்கமீட்,மிஸ்ஷாகுல்ஹக்,உமர் ஹக்,ஷகீர்அகமட், தனிஷ கனேரியர், சைப்பின் நசீர்,முகமட்கலீவ், பஷான் ஆபில் ஆகிய வீரர்கள் முதலாவது டெஸ்ட்கிரிக்கெறபோட்டியில் ஆடவுள்ளனர். (தி-68)

## கட்டுத்துவக்கு வெடித்து சிறுவன் காயம்

(மருதங்கேணி)

துணுக்காய் பாண்டியன் குளம் பகுதியில் கட்டுத்துவக்கு வெடித்ததனால் படுகாயமடைந்த சிறுவன் ஒருவன் யாழ்.போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பாண்டியன் குளத்தைச் சேர்ந்த சோமசுந்தரம் தியாகுலம்(வயது 12) என்ற சிறுவனே சம்பவத்தில், காயமடைந்தவராவார்.

வீட்டிலிருந்த கட்டுத்துவக்கை எடுத்து பரீட்சித்துப் பார்த்த போதே அது வெடித்தது. (த-35)

## வெங்காய விலை வீழ்ச்சி

(கந்தரோடை)

யாழ்.குடாநாட்டில் வெங்காயத்தின் விலை வெகுவாக வீழ்ச்சி அடைநதுள்ளது. சுன்னாகம், மருதனார் மடம், திருநெல்வேலி ஆகிய சந்தைகளில் 6 ரூபா முதல் 10ரூபா வரையிலான விலைகளிலே வெங்காயம் விற்பனை செய்யப்பட்டு வருகின்றது.

இதனால் கூடிய விலைக்கு வெங்காயத்தினை கொள்வனவு செய்து பயிரிட்ட விவசாயிகள் பெரும் நட்டத்தை எதிர்நோக்கியுள்ளதாக வ்வசாயிகள் தரப்பில் கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது. (-3,103)


உங்கள் வலம்புரியின் வாரமலர்




சங்குநாதம்

* புலிகளின் யோசனைகளை அரசு ஏற்குமா?
* ஈழக்கடலில் தமிழக மீனவர்களின் ஊடுருவல்.
* அமைச்சர்களுக்குள் குத்துவெட்டு- அரசு ஆட்டம் காணுமா?
* ஆலடி மாநாடு.
* வியாசரின் பதில்கள்.
* செங்கை ஆழியானின் ஈழராஜா எல்லாளன் (தொடர் நவீனம்)
* பொன்.கணேசமூர்த்தியின் கடிவாளம் இல்லாத கனவு (நெடுங்கதை)

இன்னும் பற்பல...

வாசிக்கத் தவறாதீர்கள் திங்கள் வைகறையில் உங்கள் உள்ளங்களில் ஒலிப்பது

விலை ரூபா 14.00

சங்குநாதம்

## சிறு விளம்பரம்

### வியாழன் மாறி விட்டான்

மேடம்,கடகம்,துலாம்,தனு, கும்பத்திற்கு கொண்டாட்டம; ஏனைய இராசிக்காரர்களுக்குத் திண்டாட்டம் என்றாலும் 20.08.2003ல் ராகு,கேது மாற்றத்தினால் முன்னேற்றம் உண்டாகும். இன்றே வாங்கி உங்கள் பலாபலன்களை அறியுங்கள் '' வியாழ, சனி,ராகு, கேது மாற்றம் '' ஆனந்தி வெளியீடு! சோதிடர் V.A சிவராசா எழுதியது என்று கேட்டு வாங்குங்கள. சோதிட விடயங்களுக்கு இலகம 01, பழம்றோட், கந்தர்மடம் யாழ்ப்பாணம் என்ற முகவரியில் சந்திக்கலாம். (7556)

### யுவதிகளுக்கு தொழிற்பயிற்சி

(கந்தரோடை)

கிராமிய வங்கியின் அனுசரணையுடன்,சுன்னாகம் பனை,தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தினரால் யுவதிகளுக்கு சிறு கைத்தொழிலுக்கான கடன்களும், தையல்பயிற்சி மற்றும் ஏனைய தொழிற் பயிற்சிகள் பலவும் வழங்கப்படவுள்ளன. (103)

### புதிய நியமனங்கள

(யாழ்ப்பாணம்)

மாதகல் பங்குத் தந்தையாக அருள் திரு ஏ.சி.கிறிஸ்தோப்பர் அடிகளும் இளவாலைப் பங்கிலிருந்து புதிதாகப் பிரிக்கப்பட்ட மாரீசன் கூடல், போயிட்டி பங்குத் தந்தையாக அருள்திரு நிக்சன் டொரக்ஸ் அடிகளும் புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி அதிபராக எஸ்வி.பி. மங்களராசா அடிகளும் யாழ்.ஆயரால் அண்மையில் நியமிக்கப்பட்டுள்ளனர். (பி)

### உதவிப் பணம் வழங்கப்படுகின்றது.

(கந்தரோடை)

வடக்கு-கிழக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தினால் வழங்கப்படும் பொதுசன மாதாந்த உதவிப்பணம் கடந்த 16ஆம் திகதி முதல் வழங்கப்பட்டு வருவதாகத் தெரியவருகின்றது. (103)

# திருமலை துறைமுகத்தில் உள்ள எண்ணெய் குதங்களுக்கு விடுதலைப்புலிகளால் ஆபத்து

## பா. உ. லக்ஷ்மன்கதிர்காமர் குற்றச்சாட்டு

(கொழும்பு)

திருகோணமலைத் துறைமுகத்தில் இந்தியா குத்தகைக்கு



எடுத்துள்ள எண்ணெய்க் குதங்களுக்கு தமிழீழ விடுதலைப் புலிகளால் ஆபத்து ஏற்பட்டுள்ளதாக முன்னாள் வெளிவிவகார அமைச்சரும் பொதுஜன ஐக்கிய முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினருமான லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவித்துள்ளார்.

அண்மையில், இந்தியாவிற்கு விஜயம் மேற்கொண்டிருக்கும் கதிர்காமர் இந்திய வெளிநாட்டு அமைச்சர் யஸ்வந்சிங்கா,தேசிய படைத்துறை ஆலோசகர் ஆகியோரைச் சந்தித்தபின்னர் இந்திய நாளிதழ ஒன்றிற்கு அளித்த செவ்வியிலேயே இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்து கருத்து கூறுகையில், திருகோணமலைத் துறைமுகம் தற்போது விடுதலைப் புலிகளினால் சூழப்பட்டிருக்கின்றது. எனவே,புலிகள் அங்கு இந்தியக் கம்பனிகளால் குத்தகைக்கு எடுக்கப் பட்டிருக்கும் எண்ணெய்க் குதங்கள் மீது எந்த நேரத்திலும் தாக்குதல் நடத்தும் ஆபத்து ஏற்படலாம்.

மேலும், திருமலையில் இந்திய கம்பனிகளால் குத்தகைக்கு எடுக்கப்பட்டுள்ள எண்ணெய்க் குதங்களுக்கு அருகில் எந்தவித பாதுகாப்பு ஏற்பாடுகளும் இல்லாதமையினால் இந்தியா இவ்விடயம் குறித்து மிகுந்த, கவனம் எடுக்க வேண்டும்.

புலிகளின் தந்திரோபாயங்கள் மற்றும் தாக்குதல்கள் குறித்து இந்தியா ஏற்கனவே அறிந்திருப்பதால், மேற்படி எண்ணெய்க் குதங்களைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.இலங்கையில் களநிலவரங்கள் மீதான அக்கறையுடன் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதற்கான எந்தவொரு அரசியல் யாப்பு ஏற்பாட்டின் மீதும் இந்தியாவிற்கு நியாயபூர்வ அக்கறையிருக்கிறது. அத்துடன், தமிழீழ விடுதலைப்புலிகளின் தனிநாட்டுக் கோரிக்கையினை இந்திய அரசு ஒருபோதும் ஏற்காது என்றே நான் நம்புகிறேன.

இதேவேளை, இலங்கைக்கும் இந்தியாவிற்குமிடையே பாலம் அமைக்கும் திட்டம் குறித்து தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா வெளிப்படுத்தியிருக்கும் பாதுகாப்புக் கவலைகளை முழுமையாக நாம் புரிந்துகொள்கின்றோம் என்றும் லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவித்துள்ளார். (தி-10)



கண்டிவீதி புங்கன்குளப் பகுதியில் வீதியின் குறுக்கே பாரிய மரம் வீழ்ந்து கிடப்பதை படத்தில் காணலாம்.

( படம்:ஜெராட் )

## வான் – ரயில் விபத்தில் இருவர் பலி; ஒருவர் காயம்

(கொழும்பு)

ராகமை ரயில்வேக் கடவையில் நேற்றுக் காலை இடம்பெற்ற விபத்தில் இருவர் பலியானதுடன், ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

ராகமை ரயில்வே கடவை மூடப் பட்டிருந்த போதும், வேகக் கட்டுப்பாட்டை இழந்த தனியார் வான் ஒன்று சென்றுகொண்டிருந்த ரயிலுடன் மோதியதனால் இவ் விபத்து ஏற்பட்டது.

படுகாயமடைந்தவர் ஆபத்தான நிலையில் ராகமை வைத்திய சாலையில் சேர்க்கப்பட்ட போதும், மேலதிக சிகிச்சைக்காக தற்போது கொழும்பு வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். (தி)


இந்த முதலீடு
தினந்தோறும் உங்களுக்குப்
பலன் கொண்டு வரும்




விலை ரூ.195,350/- இலிருந்து மேல
(எல்லா வரிகளும் அடங்கும்)

பஜாஜ்
முச்சக்கர வண்டிகள்

எதிர்காலத்திற்காக முதலீடு செய்வது புத்திசாலித்தனமான செயல் எனினும் அவ்வாறான முதலீட்டை மேற்கொள்ளு முன்னர் அதிலுள்ள சாதக பாதகங்கள் பற்றி அறிந்திருக்க வேண்டும். அதிலும் பஜாஜ் முச்சக்கர வண்டிகளில் செய்யும் முதலீடானது வியக்கத்தக்க வகையில் முதலீடுசெய்த முதல் தினத்திலிருந்தே பலனளிக்கக்கூடியது.

எனவே பஜாஜ் முச்சக்கர வண்டியில் இன்றே முதலீடு செய்யுங்கள். அதன்மூலம் நீண்டகால பலனைப் பெற்றுக் கொள்ள வாய்ப்பு கிட்டுவதோடு நிலையான தினசரி வருமானத்தையும் பெற்றுக் கொள்ள முடியும். ஒரு மாதத்திற்கு நீங்கள் உழைக்கும் வருமானத்தை சிந்தியுங்கள். முதலீட்டைப் பெருக்கும் அற்புத வழி இதுவென்பதை நிச்சயம் உணர்வீர்கள்.

ஏனைய சலுகைகளைப் பாருங்கள்

- சிறிய அல்லது மலிவான பராமரிப்புச் செலவு
- மலிவான ஓட்டக் கட்டணம்
- சிறந்த எரிபொருள் பாவனை





டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி லிமிட்டட்

த.பெ.1909,75,ஹைட்பார்க் கோணர்,கொழும்பு 02.தொ.பே: 074-700600, பக்ஸ்:074-700677,687175 Web Site:WWW.dpmco.com
பிரதேச கிளை அலுவலகங்கள்: 174B,கட்டுகஸ்த்தோட்டைவீதி, கண்டி.தொ.பே:08-226146 பக்ஸ்: 08-238134
27E,வியாபார ஸ்தாபனம், தெகியத்தகண்டிய. தொ.பே:027-50037 பக்ஸ்: 027-50222
382, அனகாரிக்க தர்மபால மாவத்தை, மாத்தறை. தொ. பே: 041-28488 பக்ஸ்: 041-27488
றீகல் மாவத்தை, அம்பாறை. தொ.பே:063-22997,பக்ஸ்: 063-23662
31பீ,மைத்திரிபாலசேனாநாயக்க மாவத்தை, அநுராதபுரம்.தொ.பே. 025-25048/9 பக்ஸ்: 025-25050
தனசிரி கட்டிடம், இல.195,பிரதான வீதி, இரத்தினபுரி.தொ.பே/பக்ஸ்: 045-22389
இல.116,குருணாக்கல் வீதி, புத்தளம். தொ.பே: 032-67410 பக்ஸ்: 032-67411 .
பிராந்திய அலுவலகம்: இலக்கம் 72.தறங்காகட்டிடம். பாக் வீதி. நுவரேலியா. 052-35760. 052-35761

பஜாஜ் - உங்களது நாளாந்த இலாபத்துடன் பயணிக்கும் முதலீடு

[C/6570]

நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை முறியடிக்க

# ஜெயாவின் அ.தி.மு.க. ஆதரவையும் பெற்றுக்கொள்ள பி.ஜே.பி.முடிவு

(புதுடில்லி)

இந்தியாவில் ஆட்சியில் இருக்கும் வாஜ்பாய் அரசுக்கு எதிராக எதிர்க்கட்சிகள் கொண்டுவந்துள்ள நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை முறியடிப்பதற்குப் பாராளுமன்றத்தில் இருக்கும் அ.தி.மு.கழக உறுப்பினர்களின் ஆதரவையும் கோருவதென தேசிய ஜனநாயகக் கட்சிகளின் கூட்டத்தில் முடிவெடுக்கப் பட்டுள்ளது.

இன்று இந்தியப் பாராளுமன்றத்தில் நடைபெறவுள்ள நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீதான விவாதத்தின் போது, எதிர்க்கட்சிகளின் பல்வேறு பிரச்சினைகளை அம்பலப்படுத்தப் போவதாக பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய் கூறியுள்ளார்.

நேற்று முன்தினம் பிரதமர் தலைமையில் இடம்பெற்ற தேசிய ஜன நாயகக் கட்சிகளின் கூட்டத்தில் காங்கிரஸ் கட்சி கொண்டுவந்துள்ள நம்பிக்கையில்லாத் தீர்மானத்தினை எதிர்கொள்வதற்கான யுக்தி குறித்து ஆராயப்பட்டது.

இக்கூட்டத்தின் முடிவில் செய்தியாளர்களிடம் பேசிய தேசிய ஜனநாயகக் கட்சியின் ஒருங்கிணைப்பாளர் ஜோர்ஜ் பெர்னாண்டஸ்,

இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை மிகச் சுலபமாகத் தோற்கடித்துவிடலாம் என்று மிகுந்த நம்பிக்கையுடன் தெரிவித்தார்.

தெலுங்குத் தேசக் கட்சியும், வெகுஜன சமாஜக் கட்சியும் தமது ஆதரவைப் பிரதமரிடம் முன்னரே உறுதிப்படுத்தி விட்டன என்றும், அனைத்து இந்திய அ.தி.மு.க.வை தேவைப்படுமிடத்து நாடுவோம் அப்போது, அ.தி.மு.க. அரசை ஆதரிக்குமேயானால், அதனை மிகவும் வரவேற்போம் என்று ஜோர்ஜ் பெர்னாண்டஸ் கூறியுள்ளார்.

### வைகோவை அழைத்துவரவும் யோசனை

தி.மு.கவும், அனைத்து இந்திய அ.தி.மு.கவும் அரசாங்கத்தை ஆதரிப்பதில் முரண்பாடுகள் எவையும் இல்லையென மேலும் கூறிய அவர்,

நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீது வாக்களிப்பதற்காகப் பொடா சட்டத்தின் கீழ் வேலூர்ச் சிறையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள ம.தி.மு.க. பொதுச் செயலர் வைகோவை மக்களவைக்கு அழைத்து வருவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டு வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, அ.தி.மு.க தவிர்ந்த 323 எம்.பி.க்களின் ஆதரவு தேசிய ஜனநாயகக் கூட்டணிக்கு இருப்பதாக பா.ஜ.க. செய்தித் தொடர்பாளர் விஜயகுமார் மல்ஹோத்ரா கூறியுள்ளார்.

இது தேவையான எண்ணிக்கையை விட 50 அதிகமானது. எதிர்க்கட்சித் தலைவி சோனியா காந்தியால் கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானம் இன்று பகல் 12 மணிக்கு விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டு நாளை செவ்வாய்க்கிழமை 5 மணி வரை விவாதம் தொடரும்.

இதனையடுத்து, பிரதமர் பதிலளித்த பின்னர் 6 மணியளவில் வாக்களிப்பு இடம்பெறுமென எதிர்பார்க்கப்படுகிறது. (பி-2)

## சீனாவில் பூமிஅதிர்வு

(பெய்ஜிங்)

சீனாவின் வடபகுதியில் பூமி அதிர்வுகள் ஏற்பட்டுள்ளது. சுமார் 5.9 ரிச்சர்ட் அளவு பதிவான இப்பூமி அதிர்வினால் ஏற்பட்ட சேத விபரங்கள் குறித்து எதுவும் தெரியவராத போதிலும்,

பெய்ஜிங்கின் தலை நகரிலிருந்து 540 கிலோமீற்றர் தொலைவில் இப்பூமியதிர்ச்சி ஏற்பட்ட போதிலும், அதன் பாதிப்பு தலைநகரிலும் உணரக்கூடியதாக இருந்ததென சீன அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கடந்த மாதம் ஏற்பட்ட இதே போன்ற பூமி அதிர்வில் 15 பேர் கொல்லப்பட்டதுடன்,300 பேர்வரை காயமடைந்தமை இங்கு குறிப்படதத்க்கது. (2)

உலக தரிசனம்

## கார்கில் போருக்கு வித்திட்டவர் முஷாரப்!

### முன்னாள் பிரதமர் குற்றச்சாட்டு

(இஸ்லாமபாத்)

இந்தியா-பாகிஸ்தான் போர் இயல்படைவதை 1999 ஆம் ஆண்டு நடைபெற்ற கார்கில் போர் தடுத்து நிறுத்திவிட்டதென முன்னாள் பாகிஸ்தான் பிரதமர் நவாஸ்செரீப் கூறியுள்ளார்.

கடந்த வியாழக்கிழமை லாகூரில் இடம்பெற்ற ஜனநாயக மீட்புக்கூட்டணியின் பேரவையில் வாசிக்கப்பட்ட நவாஸ்செரீபின் உரையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

4ஆயிரத்திற்கும் அதிகமான பாகிஸ்தானிய வீரர்களைக் கொன்ற கார்கில் போருக்குத் திட்டம் தீட்டியவர் தற்போது ஜனாதிபதி பதவியிலிருக்கும் ஜெனரல் பர்வேஷ் முஷாரப் தான் என அதில் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

அதேவேளை. கார்கில் போரில் உயிரிழந்த பாகிஸ்தானிய வீரர்களின் விபரங்களை நவாஷ் செரீப் இப்போதுதான் வெளியிட்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.(பி-2)

## ஊழியர் பிரச்சினை தொடர்பான தமிழ்நாடரசின் செயல் தவறானது

### உலக தொ.சங்கப் பேரவை கண்டனம்

(புதுடில்லி)

வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்ட அரச ஊழியர்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணும் விடயத்தில் தமிழ்நாடு அரசு எடுத்துக் கொண்ட நடவடிக்கைகளுக்கு உலகத் தொழிலாளர் சங்கங்களின் பேரவை கடுமையான கண்டனத்தை வெளியிட்டுள்ளது.

முக்கியமாக வேலை நிறுத்தத்தில் ஊழியர்கள் ஈடுபடுவதற்கான அங்கீகாரத்தினை ரத்துச் செய்தமையினைச் சுட்டிக்காட்டித் தமது கண்டனத்தை இப் பேரவை வெளியிட்டுள்ளது. தமிழ்நாடு அரசின் இந்த நடவடிக்கை அரச ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களை பழிவாங்கும் செயல் இதுவெனக் கூறியுள்ளது.

உலக தொழிற் சங்கங்கள பேரவையில் இணைந்துள்ள இந்திய தொழிற்சங்கங்கள் நேற்று முன்தினம் புதுடில்லியில் கூடி, வேலை நிறுத்த உரிமையை உச்ச நீதிமன்றம் மறுத்துள்ள செயல் உழைக்கும் வர்க்கத்தினர் அரும்பாடுபட்டு வென்ற உரிமைகள் மீதான மிகவும் மோசமான தாக்குதல் ஆகுமெனக் கூறியுள்ளன.

உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பினை எதிர்த்து சர்வதேச தொழிலாளர் நல அமைப்பில் முறையிடுவது என்றும், உலக தொழிற் சங்கங்கள் பேரவை முடிவுசெய்துள்ளது. (பி-2)

## அமெரிக்காவை ஸ்தம்பிக்க வைத்த மின்சாரத் தடை நீங்கியுள்ளது

(வாஷிங்டன்)

அமெரிக்காவில் வரலாறு காணாத வகையில் கடந்த வெள்ளிக்கிழமை ஏற்பட்ட மின்சாரத் தடை தற்போது நீங்கியுள்ளது.

இதனையடுத்து, அமெரிக்காவின் அனைத்து நடவடிக்கைகளும் வழமைக்குத் திரும்பியுள்ளன. சுமார் 29 மணித்தியாலங்கள் நீடித்த இந்த மின்சாரத் தடை காரணமாக அமெரிக்காவின் முக்கிய நகரங்களும், கனடாவின் முக்கிய மாநிலங்களும் இருளில் மூழ்கியிருந்தன.

இதனால், ஐக்கிய நாடுகள் சபையின் வழமையான கூட்டம் உட்பட வழமையான நடவடிக்கைகள் அனைத்தும் முற்றாக ஸ்தம்பிதம் அடைந்து காணப்பட்டன.

தற்போது இந்த மின்சாரத் தடை நீங்கி அதன் விநியோகம் சீரடைந்துள்ள போதிலும், மீண்டும் இதே போன்று மின்தடை ஏற்படும் வாய்ப்பு இருப்பதாக அமெரிக்க வலுத்துறை அமைச்சின் செயலாளர் அச்சம் தெரிவித்துள்ளார். (பி-2)

## இந்தியாவுடன் இணைந்து போக பாகிஸ்தானுக்கு அழைப்பு

(புதுடில்லி)

சமாதானப் பாதையில் இந்தியாவுடன் இணைந்து நடக்குமாறு பாகிஸ்தானுக்கு அழைப்பு விடுத்துள்ள இந்தியப் பிரதம மந்திரியின் அறிக்கையை அனைத்துக் கட்சிகளினதும் ''குறியட்'' மாநாடு வரவேற்றுள்ளது.

பேச்சுவார்த்தைகளின்மூலம் அமைதியும், இயல்புநிலையும் மாநிலத்தில் திரும்பும் வகையில் இந்தியாவும் பாகிஸ்தானும் எடுக்கும எந்தவொரு நடவடிக்கையையும் குறியட் மாநாடு ஆதரிக்குமென இம்மாநாட்டின் தலைவர் மௌலானா அப்பாஸ் கூறியுள்ளார்.

இதேவேளை, இந்தியா, பாகிஸ்தானிடையேயான சமாதானத்திற்கு பாகிஸ்தானின் எல்லைதாண்டிய பயங்கரவாதம் பெரும் முட்டுக்கட்டையாகவே இருந்துவருவதாகவும் இதனால் எந்தவொரு அமைப்பினாலும் எடுக்கப்படும் இந்தியா-பாகிஸ்தானிடையான சமாதான முன்முயற்சிகள் தடைப்பட்ட வண்ணமே இருப்பதாக அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர். (பி-2)

## பின்லேடனின் புனிதப்போர் இஸ்லாத்துக்கு மாறானதாம்

### சவூதி சமயத்தவர்கள் கருத்து

(ரியாத்)

சர்வதேச பயங்கரவாதி என வர்ணிக்கப்படும் ஒஸாமா பின்லேடனின் ''ஜிக்காத்'' எனப்படும் புனிதப் போரிற்கு சவூதி அரேபியாவின் சமயத் தலைவர்கள் வெளியிட்டுள்ள ஷக்த்பாய் எனப்படும் சமயக் கட்டளைக கண்டனம் வெளியிட்டுள்ளது.

வெடிகுண்டுச் சம்பவம், படுகொலை மற்றும் சொத்துக்களை நாசம் செய்வது போன்ற சதிச் செயல்களில் ஈடுபடுவோரை கடுமையாகத் தண்டிக்க வேண்டும் என்று அது கூறுகிறது.

இச்செயல்கள் அனைத்தும் இஸ்லாத்துக்கு எதிரானது என்றும், இதைப் புனிதப் போரின் ஒரு பகுதி எனக் கூறிக்கொள்பவர்கள் தவறான திசையில் செல்பவர்கள்.

செப்ரம்பர் 11ஆம் திகதி தாக்குதலுக்குப் பின்னர், பயங்கரவாதத்தை ஒடுக்குமாறு சவூதி அரேபியாவின் மீது அமெரிக்கா அதிகமான நெருக்குதல் கொடுத்து வருகின்றது.

இந்நிலையிலேயே சவூதி அரேபியாவின் இந்தக் கட்டளை தனது கணடனத்தை வெளியிட்டுள்ளது. (பி-2)

## ஐரோப்பாவைப் பாதித்த வெப்ப அதிகரிப்பு

ஐரோப்பா மற்றும் வடஅமெரிக்க நாடுகளில் திடீரெக அதிகரித்திருக்கும் வெப்ப அலை காரணமாக ஏராளமானவர்கள் பலியாகி வருவதுடன், காட்டுத்தீ போன்ற அனர்த்தங்களும் ஏற்பட்டு வருகின்றன.

இதனால், கடந்த ஒரு நூற்றாண்டு காலத்தில் ஏற்பட்டிருக்கும் மிக மோசமான வெப்பநிலை இது எனவும் கூறப்பட்டுள்ளது.(2)

## கழுத்துப்பட்டி அணிந்தால் கண்பார்வை குறைந்துவிடும்

### அமெ. விஞ்ஞானி கூறுகிறார்

(வாஷிங்டன்)

கழுத்துப் பட்டியை அணியும் ஆண்கள் அவதானமின்றி அதனை அணிந்து கொண்டால் கண்பார்வையை இழக்க நேரிடும் என்று அமெரிக்க விஞ்ஞானி ஒருவர் எச்சரித்துள்ளார்.

இவர் தனது எச்சரிக்கை குறித்துக் கருத்துத் தெரிவிக்கையில்,

கழுத்துப்பட்டிகளை இறுக்கமாக அணியும் போது, இது கண் நரம்புகளைப் பாதிப்படையச் செய்து விடுவதாகவும், இதனால் கண்பார்வை குறைந்து அல்லது இழந்துவிடும் வாய்ப்பு உள்ளதாகக் கூறுகிறார். கண், காது மருத்துவ சிகிச்சை நிபுணரான ரொபேடரிட்ச் என்ற இந்த விஞ்ஞானி கண் விறைப்பு நோய் குறித்து நடத்திய ஆய்வு ஒன்றின் மூலமே இத்தகவலை வெளியிட்டுள்ளார்.

இவர் இந்த ஆய்வின் போது, 20 சுகதேகிகளையும் 20 குளுக்கோமா நோயாளிகளையும் ஆய்வுக்குப்படுத்தி அவர்களின் கழுத்துகளில் இறுக்கமாக கழுத்துப் பட்டிகளை அணிவித்து தனது ஆய்வினை மேற்கொண்ட போது, இத்தகவலை தன்னால் பெற்றுக் கொள்ள முடிந்ததாக கூறியுள்ளார். (பி-2)

## பனிக்கட்டிகள் கரையும் அபாயம்

(ஒஸ்லோ)

ஆட்டிக் பனிப் பிரதேசத்தில் உளள பனிக்கட்டிகள் இன்னும் நூறு ஆண்டுகளுக்குள் முற்றிலும் கரைந்து விடும் என்று சர்வதேச அறிவியல் ஆய்வாளர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

நோர்வேயில், பெர்ஜன் நகரிலுள்ள நொன்சென் ஆராய்ச்சி நிலையப் பேராசிரியர் யோகன சென்ஸ் வெளியிட்ட ஆராய்ச்சி அறிக்கையில் இத்தகவல் வெளியாகியுள்ளது. (2)

## காஸா எல்லைக்குச் செல்வதற்கு சர்வதேச உத்தரவாதம் வேண்டும்

### பலஸ்தீன அதிபர் கோருகிறார்

(ரெல்அவிவ்)

காஸா எல்லைப் பகுதிக்கு விஜயம் செய்வதற்கு முன்னர் தமக்கு சர்வதேச ரீதியில் உத்தரவாதம் வழங்கப்படவேண்டும் என பலஸ்தீன அதிபர் யஸீர் அரபாத் கூறியுள்ளார்.

இத்தகைய உத்தரவாதம் வழங்கப்பட்டால் மாத்திரமே இஸ்ரேலின் அழைப்பை ஏற்று மேற்குக் கரையில் இருந்து தம்மால் வெளியேற முடியும் என்று அவர் கூறியுள்ளார்.

மத்திய கிழக்கில் சமாதானத்தை ஏற்படுதததும் திட்டத்தின் கீழ் காஸாப் பகுதிக்குச் செல்ல யஸீர் அரபாத்திற்கு இஸ்ரேல் அனுமதி வழங்கியுள்ளது.

இவ்வார முற்பகுதியில் கொல்லப்பட்ட அரபாத்தின் சகோதரிக்கு இறுதி அஞ்சலி செலுத்த வாய்ப்பளிக்கும் வகையிலேயே இஸ்ரேல் இந்த அனுமதியை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.(பி-2)

# சர்வதேச உளவியல் மாநாடு நேற்றுக் கொழும்பில் ஆரம்பம்

(கொழும்பு)

உளமருத்துவம் தொடர்பான சர்வதேச மகாநாடொன்று நேற்றுக் கொழும்பில் அமைச்சர்கள் நிரோன் பெர்னாண்டோ, மிலிந்த மொற கொட ஆகியோரினால் தொடக்கி வைக்கப்பட்டது. இந்த நான்கு நாள் மகாநாட்டில் வெளிநாடுகளைச் சேர்ந்த 300 உள மருத்துவர்கள் பங்கு பற்றுவார்கள்.

மேற்படி சர்வதேச மகாநாட்டின் முக்கிய அமைப்பாளராக செயற்படுபவர் பிரிட்டனில் இயங்கும் இலங்கை உள மருத்துவர் சங்கத்தின் தலைவர் டாக்டர் சோமசுந்தரம்ஆவார்.

அவர் கருத்துத் தெரிவிக்கையில், இலங்கையில் சுமார் 20 மில்லியன் மக்கள் வாழ்கின்றார்கள். ஆனால் இங்கு 20 உள மருத்துவர்கள் இங்குள்ள சுகாதார சேவை நிலையங்களில் சேவையாற்றுகின்றனர். உளநல சேவைகளுக்கு இத்தொகை போதுமானதல்ல என்றார்.

பிரிட்டனிலுள்ள இலங்கை உள மருத்துவர். சங்கம் 2001 ஆம் ஆண்டு இலங்கையைச் சேர்ந்த 20 உள மருத்துவர்கள் இணைந்து ஆரம்பிக்கப்பட்டதாகும். 1970-1980களில் இலங்கையிலிருந்து வந்தவர்களே இந்தச் சங்கத்தை உருவாக்கியுள்ளனர். இப்பொழுது இச்சங்கம் வளர்ச்சியடைந்துள்ளது.பிரிட்டனில் சுமார் 200 இலங்கை உள மருத்துவர்கள் தொழில் புரிகின்றனர்.

ஹோட்டல் தாஜ் சமுத்திராவில் நடைபெறும் இம் மகாநாட்டின் மூலம் உள மருத்துவம் தொடர்பான நாம் பெற்ற தெளிந்த அறிவையும் திறன்களையும் எமது தாய் நாட்டிற்கு வழங்குவதே எமது நோக்கம். இலங்கையின் உள மருத்துவர்களுடன் நெருங்கிய தொடர்புகளை ஏற்படுத்தி இலங்கையின் உள நோய் மருத்துவம் தொடர்பான பிரச்சினைகளை ஆராய்வதற்கான மேடையாக இம் மகாநாடு விளங்கும் எனவும் டாக்டர் சேமசுந்தரம் தெரிவித்தார். (பி)

## குடாநாட்டு விவசாயி...




# திருவாவடுதுறை ஆதீன முதல்வர் 23ந்திகதி இலங்கை வருகிறார்

## அரச வரவேற்பளிக்க ஏற்பாடு

(கொழும்பு)

திருக்கைலாய பரம்பரை திருவாவடுதுறை ஆதீனம் 23வது குரு மகா சன்னிதானம் சீர்வளம் சீர் சிவப்பிரகாச தேசிக பரமாச்சார்ய சுவாமிகள் முதல் முறையாக இலங்கைக்கான விஜயமொன்றை மேற்கொள்ள விருக்கிறார். அவரது இலங்கை விஜயத்தின் பொழுது கொழும்பு, திருக்கேதீஸ்வரம், வவுனியா, திருகோணமலை, யாழ்ப்பாணம் ஆகிய பல இடங்களுக்கும் அழைத்துச் செல்லப்பட்டு பிரசித்தி பெற்ற ஆலயங்களில் அருள் உரைகள் வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. சகல ஏற்பாடுகளையும் செவ்வனே நிறைவேற்றுமாறு இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சர் தி. மகேஸ்வரன் அமைச்சு அதிகாரிகளுக்கு உரியபணிப்புரைகளை விடுத்துள்ளார்.

இலங்கையின் அதி புராதனமான பாடல்பெற்ற ஸ்தலமான திருக்கேதீஸ்வர ஆலயத்தின் மண்டல நன்னீராட்டு நிறைவுப் பெருவிழா நிறைவு பெறுவதை முன்னிட்டு எதிர்வரும் 23ஆம் திகதி நடைபெறவிருக்கும் மண்டலாபிஷேக நிறைவு விழாவில் கலந்துகொள்ளுமாறு திருக்கேதீஸ்வர ஆலய திருப்பணிச் சபையின் தலைவர் மூதறிஞர் ஆர்.நமசிவாயத்தின் அழைப்பையேற்று திருவாவடுதுறை ஆதீன குரு மகாசன்னிதானம் இலங்கைக்கு வருவதற்கான வாய்ப்புக் கிடைத்துள்ளது.

இந்து சமய அலுவல்கள் அமைச்சர் தி.மகேஸ்வரனின் அழைப்பை ஏற்று உலக இந்து சமய மகாநாட்டில் கலந்து கொள்ள அவர் முன்னர் இசைவு தெரிவித்திருந்த போதிலும், உடல் நலக்குறைவினால் அந்த விஜயம் நிகழவில்லை.

திருவாவடுதுறை ஆதீன குரு மகாசன்னிதானத்தை அரச அதி முக்கிய பிரமுகர் ஒருவருக்கு வழங்கக்கூடிய கௌரவத்துடன்வரவேற்பதற்கான சகல ஒழுங்குகளையும் அமைச்சர் மேற்கொண்டுவருகிறார். (பி)

### சீருடை அணிந்து கடமை புரியுமாறு

# சுகாதார சேவைத் திணைக்களப் பணியாளர்களுக்கு அறிவுறுத்து

(சுதுமலை)

சுகாதார சேவைகள் திணைக்களத்தின் கீழ்இயங்கும் போதனா வைத்தியசாலைகள், கிராமிய அரசினர் வைத்தியசாலைகள், மத்திய மருந்தகங்கள் மற்றும் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளின் வெளிக்களக் கடமையில் ஈடுபடும் சகல ஊழியர்களும் தமக்கென வழங்கப்பட்டுள்ள சீருடையில் கடமைபுரியவேண்டும் எனத் தெரிவித்து சுகாதார போசனை நல நோன்பு அமைச்சின் செயலாளர் டாக்டர் ரெஜிபெரேரா சகல சுகாதார சேவைப் பணிப்பாளர்கள், போதனா வைத்திய சாலைப் பணிப்பாளர்கள் மற்றும் வைத்தியசாலைப் பொறுப்பதி காரிகள் ஆகியோருக்கு அவசர சுற்றறிக்கை ஒன்றை கடந்தவாரம் அனுப்பிவைத்துள்ளார்.

அச்சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

பல வைத்தியசாலைகளில் ஊழியர்கள் கடமைநேரங்களில் சீருடை அணிவதில்லை என பல முறைப்பாடுகள் சுகாதார அமைச்சுக்குக் கிடைக்கப் பெற்றுள்ளன. சீருடைக்கான கொடுப்பனவு தையல்கூலி ஆகியன திணைக்களத்தால் வழங்கப்பட்டு வநத போதிலும் கடமை நேரத்தில் சீருடை அணியாமல் இருப்பது கணடுபிடிக்கபட்டால் அன்றைய தினத்திற்கான சம்பளம் வெட்டப்படும்.

அததுடன், சீருடைக்கான கொடுப்பனவு மற்றும் சீருடைக்கான பொருட்கள் வழங்கப்படுவதும் இடை நிறுத்தப்படும்.

அதேசமயம், இந் நடைமுறை உடனடியாக அமுல்படுத்தப்படும் எனவும் மற்றும் சுகாதார அமைச்சின் சீருடை அணியும் உரித்துடைய சகல அலுவலருக்கும் இது பொருந்துமெனவும் மேலும் அச்சுற்றறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

(உ-252)

# விண்ணப்பித்தவர்களுக்கு மட்டுமே

## தங்குமிட வசதியின்றி ஆசிரியர்கள் சிரமம்

கான விஜயமொன்றை மேற்கொள்ளவிருக்கிறார். அவரது இலங்கை விஜயத்தின் பொழுது கொழும்பு, திருக்கேதீஸ்வரம், வவுனியா, திருகோணமலை, யாழ்ப்பாணம் ஆகிய பல இடங்களுக்கும் அழைத்துச் செல்லப்பட்டு பிரசித்தி பெற்ற ஆலயங்களில் அருள் உரைகள் வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. சகல பாடல்பெற்ற ஸ்தலமான திருக்கேதீஸ்வர ஆலயத்தின் மண்டல நன்னீராட்டு நிறைவுப் பெருவிழா நிறைவு பெறுவதை முன்னிட்டு எதிர்வரும் 23ஆம் திகதி நடைபெறவிருக்கும் மண்டலாபிஷேக நிறைவு விழாவில் கலந்துகொள்ளுமாறு திருக்கேதீஸ்வர ஆலய திருப்பணிச் சபையின் தலைவர் மூதறிஞர் ஆர்.நமசிவாயத்தின் அழைப்பையேற்று திருவாடில் கலந்து கொள்ள அவர் முன்னர் இசைவு தெரிவித்திருந்த போதிலும், உடல் நலக்குறைவினால் அந்த விஜயம் நிகழவில்லை.

திருவாவடுதுறை ஆதீன குரு மகா சன்னிதானத்தை அரச அதி முக்கிய பிரமுகர் ஒருவருக்கு வழங்கக்கூடிய கௌரவத்துடன்வரவேற்பதற்கான சகல ஒழுங்குகளையும் அமைச்சர் மேற்கொண்டுவருகிறார். (பி)

யில் கடமைபுரியவேண்டும் எனத் தெரிவித்து சுகாதார போசனை நலநோன்பு அமைச்சின் செயலாளர் டாக்டர் ரெஜிபெரேரா சகல சுகாதார சேவைப் பணிப்பாளர்கள், போதனா வைத்திய சாலைப் பணிப்பாளர்கள் மற்றும் வைத்தியசாலைப் பொறுப்பதி காரிகள் ஆகியோருக்கு அவசர சுற்றறிக்கை ஒன்றை கடந்தவாரம் அனுப்பிவைத்துள்ளார்.

லும் கடமை நேரத்தில் சீருடை அணியாமல் இருப்பது கண்டுபிடிக்கபட்டால் அன்றைய தினத்திற்கான சம்பளம் வெட்டப்படும்.

அததுடன், சீருடைக்கான கொடுப்பனவு மற்றும் சீருடைக்கான பொருட்கள் வழங்கப்படுவதும் இடை நிறுத்தப்படும்.

அதேசமயம், இந் நடைமுறை உடனடியாக அமுல்படுத்தப்படும் எனவும் மற்றும் சுகாதார அமைச்சின் சீருடை அணியும் உரித்துடைய சகல அலுவலருக்கும் இது பொருந்துமெனவும் மேலும் அச்சுற்றறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

(உ-252)

# விண்ணப்பித்தவர்களுக்கு மட்டுமே சீருடைத்துணி வழங்கப்படும்

## கல்வி அமைச்சு அதிகாரி தெரிவிப்பு

(கொழும்பு)

அடுத்த ஆண்டுக்கான பாடசாலை சீருடைக்கென ரூ.7500 மில்லியனை தல்வி அமைச்சு ஒதுக்கியுள்ளது இது தொடர்பாக அமைச்சு அதிகாரி கருத்து தெரிவிக்கையில், சீருடைக்கென விண்ணப்பித்தவர்களுக்கு மட்டுமே சீருடைத்துணிகள் வழங்கப்படும். உயர்தர பரீட்சைக்கு தோற்று மாணவர்கள் சீருடைக்கென விண்ணப்பிக்காமல் விடுவதாலும், நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்த மாணவர்களும் வழமையில விண்ணப்பிக்காததாலும் பெருமளவு செலவினை அரசாங்கத்தால் குறைக்க முடிந்துள்ளதாக கூறினார்.

மேலும் 50வீதமான துணியினை சீனாவிலிருந்து இறக்குமதி செய்ய விருப்பதாகவும் மிகுதி 50வீதம் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் துணிகளையும் சேர்த்து வழங்கவிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இதன் மூலம் குறைந்து செல்லும் உள்நாட்டுப் புடவைக் கைத்தொழிலினை மேம்படுத்த முடியுமென கூறப்படுகிறது.

பிரதேச செயலகங்களில் ஏற்படுகின்ற தேக்க நிலையை தவிர்ப்பதற்காக கிராம சேவர்களினூடாகவே விண்ணப்கக்களை அனுப்பும ஒழுக்குகளை இவ்வருடம் முதல் மேற்கொண்டிருப்பதாகவும் தெரிவித்தார். அத்துடன், ஆசிரியர் மதிப்பீட்டுத் திட்டம் தொடர்பாக எழுத்துள்ள சர்ச்சையை சுமுகமாகவும் நெகிழ்ச்சித்தன்மையுடையதாகவும் தீர்த்து வைப்பதற்கு கல்வி அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு தீர்மானித்துள்ளார். அணமையில் 43ஆசிரிய சங்கங்களுடன் இடம் பெற்ற கலந்துரையாடல்களை தொடர்ந்தே அமைச்சர் இம் முடிவினை மேற்கொண்டுள்ளார். இத திட்டம் ஆசிரியர்களின் வேலைப்பளுவினை அதிகரிப்பதாகக் கூறி இதனை கைவிடும்படி மேற்படி சங்க அங்கத் தவர்கள் கோரிக்கை விடுத்திருத்தமை குறிப்பிடத்தக்கது. (பி)

# கிழக்கு மாகாணத்தின் பாதுகாப்பு நடவடிக்கைகளை தீவிரப்படுத்த உத்தரவு

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தின் பாதுகாப்பு நடவடிக்கைகளை தீவிரப்படுத்தும் படி அரசாங்கம் உத்தரவிட்டுள்ளது என அம்பாறை மாவட்டப் பொலிஸ் விசேட அதிரடிப்படையின் கட்டளை இடும் அதிகாரி வசந்த ரட்நாயக்க தெரிவித்துள்ளார்.

இம் மாகாணததின் தமிழ் அரசியல் கட்சி உறுப்பினர்களும் இராணுவப்புலனாய்வுப் பிரிவு உறுப்பினர்களும் இனந்தெரியாத நபர்களினால் படுகொலை செய்யப்பட்டு வருவதை அடுத்தே, இவ் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை மாகாணத்தில் தமிழ அரசியல் கட்சி உறுப்பினர்களின் அலுவலகங்களுக்கு ஏற்கனவே பொலிஸ பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

இருப்பினும், தமிழ் கட்சி உறுப்பினர்கள் பாதுகாப்புப் பிரிவினருக்கு தெரியாமல் பயணங்களை மேற்கொள்வதால்,அவர்களின் பாதுகாப்பை உறுதி செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, மட்டக்களப்பு, காரைதீவு ஈ.பி.டி.பி அலுவலகத்தில் இருந்த உறுப்பினர் ஒருவர் கடந்த வியாழக்கிழமை இனம் தெரியாத நபர்களினால் சுட்டுக்கொல்லப்பட்டதை அடுத்து அம்முகாமுக்கு மேலதிகப் பாதுகாப்பு வழக்கப்பட்டுளளது. (இ)

# யுனிசெவ் அனுசரணையுடன் கட்டிடத்தொகுதி நிர்மாணம்

(மருதங்கேணி)

கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் யுனிசெவ் நிறுவன அனு சரணையுடன் கட்டிடத் தொகுதி ஒன்று அமைக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டது.

மகாவித்தியாலய அதிபர் வ.யோகநாதன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் சாள்ஸ் அன்ரனி படையணியைச் சேர்ந்த காண்டீபன் தமிழீழத் தேசியக் கொடியை ஏற்றி வைத்தார். பாடசாலைக் கொடியை அதிபர் வ.யோகநாதன் ஏற்றி வைத்தார். மங்கள விளக்கினை சென திரேசா பெண்கள் கல்லூரி அதிபர் திருமதி அரியரத்தினமும் பாட சாலை அபிவிருத்தி சபை தலைவர். பசுபதிபிள்ளையும் ஏற்றி வைத்தனர்.

புனரமைக்கப்பட்ட மண்டபத்தை யுனிசெவ் பிரதிநிதி மைக் கல் கோபலண்ட்நாடாவை வெட்டித்திறந்து வைத்தார். (பி-35)

# தங்குமிட வசதியின்றி ஆசிரியர்கள் சிரமம்

(மருதங்கேணி)

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள மாங்குளம் மகாவித்தியாலயத்தில் கல்வி கற்பிக்கும் வெளிமாவட்டங்களைச் சேர்ந்த ஆசிரியர்கள் தங்குவதற்கேற்ற விடுதிகளோ,வீடுகளோ இன்றிச் சிரமப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஜெயசிக்குறு நடவடிக்கையின் போது இடம் பெயர்ந்த இப்பகுதி மக்கள் தற்போது மீளக்குடியேறியதையடுத்து, மாங்குளம் மகாவித்தியாலயம் தனது சொந்தஇடத்தில் இயக்க ஆரம்பித்துள்ளது.

போரினால் இப்பகுதியில் பெருமளவு கட்டடங்கள் சேதம் மடைத்திருப்பதாலேயே,வெளி மாவட்டங்களைச் சேர்ந்த ஆசிரியர்கள் தங்குவதற்கு ஏற்ற விடுதிகள், வீடுகளின்றிச் சிரமக்க[illegible] எதிர் நோக்குவதாகத் தெரிவிக்க[illegible]டுகின்றது. ([illegible]5)

# கிருஷ்ண ஜெய உற்சவம

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலயததில் எதிர்வரும் 20ஆம் திகதி புதன்கிழமை ஸ்ரீ.கிருஷ்ணஜெயந்தி உற்சவம் (கண்ணன்பிறப்பு) சிறப்புற நடைபெறவுள்ளது.

நள்ளிரவு 12மணிக்கு கண்ணனின் பிறப்பு நேரத்தில் 1008 சங்காபிஷேகம, குழந்தை தாலாட்டுப பாடல் மற்றும் குழந்தை நாள் நிவேதனம் வழங்கல் ஆகிய நிகழ்வுகள் இடம் பெறவுள்ளன.

அதிகாலை 5மணிக்கு கிருஷ்ண பகவான் பூந்த்ண்டிகையில வெளி வீதி உலா வருவதுடன், ஆலய[illegible] வதியில கண்ணன் வெண்[illegible]டும் உறியடி உற்சவமும் நடை[illegible]ளது. ([illegible]10)

## இன்னும் ஒரு தகவல்

# முதுமையில் இளமை

எங்கள் ஊரில் ஒரு பாட்டி இருந்தார். அவர் 100 வயதைத் தாண்டியவர். வயதான காலத்தில் கூட மிகவும் சுறுசுறுப்பாக இருந்தார். அதிகம் இனிப்புச் சேர்த்துத் தேநீர் குடிப்பார். பாட்டிக்கு நிறைய இனிப்புக் கொடுத்தால் சர்க்கரை வியாதி வந்து விடாதா என்று சிலர் கேட்பது வழக்கம். ''இனிப்புக்குத்தான் வியாதி வரும் பாட்டிக்கு வராது'' என்று நான் கூறுவேன். அவரது உடல் அந்தளவுக்கு உறுதி மிக்கது!

அது எப்படி அவரால் இந்த வயதிலும் சுறுசுறுப்பாக இருக்க முடிகின்றது? விஞ்ஞானம் என்ன கூறுகின்றது தெரியுமா? மூளை சுறுசுறுப்பாக வேலை செய்து கொண்டிருந்தால் முதுமையும் தள்ளிப்போகுமாம்! வயதாவதற்கான இரகசியம் மூளையில்தான் உள்ளதாம். 70 மூளையை சோதித்துப் பார்த்த பேராசிரியர் ஹேங் என்பவர் இதனைக் கூறியுள்ளார். ஆக உடலும், மனதும் எப்போதும் சுறுசுறுப்பாக, உற்சாகமாக இருக்க வேண்டும்.

பாலி தீவின் பக்கத்தில் லாம்லுக் என்ற ஒரு தீவு உள்ளது. அங்கு டேசன் அங்குங் என்று ஓர் சிறிய கிராமம். அங்கு உள்ள ஒருவருக்கு 130 வயது. அவருக்கு 6 பிள்ளைகள், 40 பேரப்பிள்ளைகள், 7மனைவியர். கடைசியாக 7வது திருமணம் செய்யும்போது இவரது வயது 110. மணமகனுக்கு 110 வயது, மணமகளுக்கு 60 வயது. கடைசி காலத்திலும் அவர் சுறுசுறுப்பாக வேலை செய்வாராம். கூடை பின்னும் வேலையாம். இதன்மூலம் அதிகம் சம்பாதிப்பாராம்.

இது போலவே பிலிப்பைன்ஸில் ஒரு பெரியவர். அவருக்கு வயது 87 தான். அவருக்கு எப்போதும் தாயின் நினைவு வந்து விடுமாம். அம்மா பிள்ளையான இவரது பெயர் செவட்டோ. இவர் தனது 27வது வயதில் பிலிப்பைன்ஸை விட்டு ஹவாய்க்கு வேலைதேடி வந்தார். அப்போதே தனது தாயைப் பிரிந்து விட்டார். ஹவாய்க்கு வந்து கரும்புத் தோட்டத்தில் வேலை செய்து நிறையச் சம்பாதித்தார். சொந்த ஊருக்குத் திரும்பவே இல்லை. ஹவாயிலேயே தங்கி விட்டார். நீண்ட நாட்களின் பின்னர் தாயைப் பார்க்கவேண்டும் என்ற ஆசை வந்து விட்டது. உடனே ஹவாயை விட்டுத் தனது சொந்த ஊருக்குத் திரும்பி விட்டார். பிலிப்பைன்ஸிற்கு வந்து தாயைத் தேடினார். பார்த்தால் தாயார் இவரை விட நலமாக இருந்தாராம். தாயாரின் வயது 107.

தாயும் பிள்ளையும் மிகவும் நலமாக மகிழ்ச்சியாக வாழ ஆரம்பித்து விட்டனராம். இவர்களை நேரில் சென்று பார்க்க வேண்டும் எனப் பலர் சென்றனர். பத்திரிகை நிருபர்களும் சென்று பார்த்தனர். ஒரு நிருபர் அந்தப் பெரியவரைப் பார்த்து ஒரு கேள்வி கேட்டாராம் ''தற்போது உங்களது இலட்சியம் என்ன?'' என்று. இதற்கு அவர் கூறிய பதில் என்ன தெரியுமா? ''எனக்குப் பொருத்தமான பெண் கிடைத்தால் திருமணம் செய்து கொள்ளலாம் என்று நினைத்திருக்கின்றேன்'' என்றாராம்.

மூளை சுறுசுறுப்பாக இருந்தால் முதுமை தள்ளிப்போகும் என்னும் உண்மை எவ்வளவுதூரம் உண்மையாக இருக்கின்றது பார்த்தீர்களா? அதனால் எப்போதும் சுறுசுறுப்பாக இருப்பதே நல்லது.

சில வருடங்களுக்கு முன்னால் எட்டயபுரம் சென்றிருந்தோம். அங்கு நூறு வயதைக் கடந்த ஒரு பெண்மணியைச் சந்தித்தோம். அவரது பெயர் வள்ளிக்கண்ணம்மாள். சிறு வயதில் பாரதியாருக்கு விளையாட்டுத் தோழியாக இருந்தவர். பின்னர் எட்டயபுரம் சமஸ்தானத்தில் ஆஸ்தான நர்த்தகியாக இருந்தவர். அவரிடம் பேட்டி எடுக்கச் சென்றோம். அப்போது அவர் என்ன கூறினார் தெரியுமா? ''இப்போதும் என்னால் நன்றாக நடனம் ஆட முடியும்'' என்றார். அவ்வளவு சுறுசுறுப்பு! ஆரோக்கியம்!

ஒரு பத்திரிகை நிருபர் 120 வயதைக் கடந்த ஒரு வயதான பெண்ணிடம் பேட்டி கண்டார். எல்லாக் கேள்விகளையும் கேட்டு விட்டு கடைசியாக இப்படிக் கூறியுள்ளார். ''ஆண்டவன் அருளால் அடுத்த வருடம் உங்களது பிறந்தநாளன்று உங்களைச் சந்திக்க வேண்டும் என்று விரும்புகின்றேன்'' என்றார். அதற்கு அந்தப் பாட்டி கூறுகிறார். ''நிச்சயமாக அது நடக்குமென்றே நான் எண்ணுகிறேன். கவலைப்பட வேண்டாம் உங்களைப் பார்த்தால் நல்ல ஆரோக்கியம் உள்ளவராகத் தான் தெரிகிறது'' நிருபர் மூச்சுக்காட்டாது வந்துவிட்டார்.

*தென்கச்சி கோ. சுவாமிநாதன்*

---

## தமிழர் புனர்வாழ்வுக் கழகம்

# புனரமைத்த 15 வீடுகள் குடியிருப்பாளரிடம் கையளிப்பு

(மட்டக்களப்பு)

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால் நிர்மாணிக்கப்பட்ட 15 வீடுகள் குடியிருப்பாளர்களிடம் எதிர்வரும் 20ஆம் திகதி வைபவ ரீதியாகக் கையளிக்கப்படவுள்ளன.

மட்டக்களப்பில் 10 வீடுகளும், அம்பாறையில் 5 வீடுகளும் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால் தலா 2இலட்சத்து 20 ஆயிரம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டன.

போரினால் பாதிக்கப்பட்டு வீடுகளை இழந்த 15 குடும்பங்களுக்கே இந்த வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது. (த-14)

---

# இலங்கையின் புனர்நிர்மாணப் பணிக்கு 100 கோடி அமெரிக்க டொலர்

## ஆசிய அபிவிருத்தி வங்கி ஒதுக்கியது

(கொழும்பு)

ஆசிய அபிவிருத்தி வங்கி தனது அடுத்த நானகு வருடங்களுக்கான திட்டத்தில் இலங்கை அரசாங்கத்தின் புனர்நிர்மாணப் பணிகளுக்கென 100 கோடி அமெரிக்க டொலாகளை ஒதுக்கியுள்ளது.

இதில் போரினால் பாதிக்கப்பட்ட வடக்கு- கிழக்குப் பகுதிகளை புனர்நிர்மாணம் செய்வதற்கு குறிப்பிட்ட தொகை ஒதுக்கப்படும் என ஆசிய அபிவிருத்தி வங்கியின் பணிப்பாளர் ஜோன் கூனி தெரிவித்துள்ளார்.

தேசிய ஏற்றுமதியாளர்கள் சம்மேளனத்தின் விருது வழங்கும் வைபவம் கடந்த வெள்ளிக்கிழமை கொழும்பில் நடைபெற்றபோது அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், ஆசிய அபிவிருத்தி வங்கி இவ்வருட அரச துறைத்திட்டத்திற்கென 140 கோடி டொலர்கள் செலவிடவுள்ளது. இதில் 80 கோடி டொலர்கள் இன்னும் ஒதுக்கப்பட இருக்கின்றன.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் வறுமை ஒழிப்புத்திட்டத்தின் முக்கிய குறிக்கோள் இலங்கையை அபிவிருத்தி செய்வதே. இலங்கை கல்வியில் வளர்ந்துள்ளபோதிலும், மக்களில் மூன்றில் ஒரு பகுதியினர் வறுமைக்கோட்டின் கீழேயே வசித்து வருகின்றார்கள்.

இலங்கையில் வறுமை மனிதனாலேயே உருவாக்கப்பட்டது எனக் கூறிய அவர், பல தசாப்த காலமாக இலங்கையில் கடைப்பிடிக்கப்பட்டு வரும் அரசியல் கொள்கைகளே வறுமைக்குக் காரணம் எனவும் குறிப்பிட்டார். (இ-3)

---

## மட்டக்களப்பு நீராவோடையில்

# தமிழ் மக்கள் மீளக்குடியமர முஸ்லிம் இனவாதிகள் தடை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு நீராவோடைக் கிராமத்தில் தமிழ் மக்கள் மீளக்குடியமர்வதற்கு எதிராக இராணுவத்தினருடன் இணைந்து சில முஸ்லிம் அரசியல்வாதிகள் செயற்பட்டு வருவதாக மட்டக்களப்பு தமிழர் புனர்வாழ்வுக் கழகம் குற்றஞ்சாட்டியுள்ளது.

பாரம்பரிய தமிழ்க் கிராமமான நீராவோடையில் இருந்து இடம் பெயர்ந்த தமிழ் மக்கள் 20 வருடங்களாக அகதி முகாம்களில் தங்கியிருக்கின்றனர்.

தற்போது ஏற்பட்டுள்ள சமாதானச் சூழ்நிலையை அடுத்து தமது சொந்தக் கிராமத்தில் மீள் குடியமர்வதற்கு அவர்கள் முயன்று வருகின்றனர்.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அனுசரணையுடன் மீள் குடியமாவுக்கான உதவிகளை நிக்கொட் நிறுவனம் வழங்கி வருகின்றது.

இவ்வாறு மீளக்குடியமரச் சென்ற மக்களை மீளக்குடியமர விடாது படையினருடன் இணைந்து சில முஸ்லிம் இனவாத அரசியல்வாதிகள் செயற்பட்டு வருவது கவலைக்குரிய விடயம் என்று தமிழர் புனர்வாழ்வுக்கழகம் குற்றஞ்சாட்டியுள்ளது. அத்துடன்,இது தொடர்பாக அறிக்கை ஒன்றையும் புனர்வாழ்வுக்கழகம் வெளியிட்டுள்ளது. (த-14)

---

## இராசி பலன்

**18. 08. 2003**
**(ஆவணி 01, திங்கள்)**

சஷ்டி - பி.ப. 3.23 வரை
அச்சுவினி- பி.ப. 4.26 வரை
இராகுகாலம் - 7.35- 09.05
சுபநேரம் - 12.05- 01.35

**மேடம்**
ஜனவசியம், எடுத்தகாரியம் கைகூடும், போசன சுகம், தன வரவு.

**இடபம்**
உணர்ச்சி வசப்படல், எடுத்த காரியம் தாமதமாகும், சுபச்செலவு, ஆரோக்கியக்குறைவு.

**மிதுனம்**
தெய்வ சிந்தை, முயற்சி கைகூடும், நல்ல வருமானம், கௌரவம்.

**கடகம்**
பிறர் உதவி, செய்தொழில் விருத்தி, நல்ல செய்தி, காரிய அனுகூலம்.

**சிங்கம்**
சிந்தனை மிகுதி, உறவினர் சந்திப்பு, இடமாற்றம், புதிய திட்டமிடல்.

**கன்னி**
நண்பர் விரோதம், காரியத் தடங்கல், உடல் வியாதி, வாகன பயம்.

**துலாம்**
தடைப்பட்ட காரியம் நிறைவேறும், குடும்பல நலம், நல்ல வரவேற்பு, தொழில் விருத்தி.

**விருச்சிகம்**
நிலை மாற்றம், உடல் நலம், காரிய சித்தி, உற்சாகம்.

**தனுசு**
வியாபார நன்மை, அமைதிக்குறைவு, காரியதாமதம், வேலையில் ஆர்வம்.

**மகரம்**
மாதாசுகம், பெரியோரால் வெறுக்கபடல், உடல் நலக்குறைவு, காரியதாமதம்.

**கும்பம்**
எடுத்த காரியம் கைகூடும், கூட்டு முயற்சி, பொருள்சேர்க்கை, தேக ஆரோக்கியம்.

**மீனம்**
அதிக வார்த்தை, காரியதாமதம், எதிர்பாராத நன்மை, தன விரயம்.

(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது)

- வளவன்.

---

# மூதூரில் ஏற்பட்ட பதற்றம் படிப்படியாகத் தணிவு

(திருகோணமலை)

மூதூர்ப் பிரதேசத்தில் நிலவி வந்த பதற்ற சூழ்நிலை தற்போது படிப்படியாகக் குறைந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எனினும், இப்பிரதேசத்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் நோக்கில் பொலிஸாரும்,இராணுவத்தினரும் கூட்டு ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

அத்துடன்,அமுல்படுத்தப்பட்டிருந்த ஊரடங்குச் சட்டம் நேற்றுக் காலையுடன் தளர்த்தப்பட்டது.

திருகோணமலை கடற்பிரதேசத்தில் கடற்றொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருந்த முஸ்லிம் இனத்தைச் சேர்ந்த தந்தையும் மகனும் இனந் தெரியாத நபர்களினால் கடத்தப்பட்ட சம்பவத்தை அடுத்தே இப்பிரதேசத்தில் பதற்ற சூழ்நிலை தோன்றியது.

எனினும்,பொலிஸார் மேற்கொண்ட பாதுகாப்பு நடவடிக்கைகளினால் 5 பொதுமக்கள் காயமடைந்தனர். இவர்கள் அனைவரும் தற்போது திருகோணமலை மாவட்ட வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (தி)

---

# தனியார் பஸ் சேவைகளை ஒழுங்குபடுத்த குழு அமைப்பு

(கொழும்பு)

தனியார் பஸ் சேவைகளை ஒழுங்குபடுத்தும் நோக்குடன் அரசாங்கத்தால் விசேட உப குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளதாக தேசிய போக்குவரத்து அதிகார சபையின் தலைவர் தெரிவித்துள்ளார்.

இவ் உபகுழுவில் போக்குவரத்து அமைச்சின் திட்டமிடல் பணிப்பாளர் கலாநிதி டி.எல் ஜெயவீர, போக்குவரத்து கொள்கைத் திட்டமிடல் நிபுணர் கலாநிதி அம்மஸ் குமார, இலங்கைத் தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தின் தலைவர் கைமுனு விஜயரட்ண, தனியார் பஸ்சேவைகள் சங்கத்தின் உதவித்தலைவர் ஸ்ரான்லி பெர்னாண்டோ ஆகியோர் அங்கம் பெறுகின்றனர்.

தனியார் பஸ்கள் மீது பொலிஸார் அறவிடும் தண்டப்பணம் அதிகரித்து வருவதை அடுத்து அடிக்கடி மேற்கொள்ளப்பட்டு வரும் வேலை நிறுத்தப் போராட்டங்களை தவிர்க்கும் முகமாகவே இக்குழு அமைக்கப்பட்டுள்ளது. (தி)

---

## இலங்கையில் பயிற்சி பெறும்

# வெளிநாட்டு ஆசிரியர்கள் எண்ணிக்கை அதிகரிப்பு

(கொழும்பு)

இலங்கையில் பயிற்சி பெறும் வெளிநாடுகளைச் சேர்ந்த ஆசிரியர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க தேசிய கல்வி நிறுவகம் உத்தேசித்துள்ளது.

இது பற்றி தேசிய கல்வி நிறுவகப் பணிப்பாளர் டி.பி.குணவர்த்தனா கருத்து தெரிவிக்கையில்,

நேபாளம், பூட்டான் ஆகிய தெற்காசிய நாடுகளுக்கு இதுபற்றி ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளது.

மாலைதீவைச் சேர்ந்த 50 ஆசிரியர்கள் தற்போது இலங்கை தேசிய கல்வி நிறுவகத்தில் பயிற்சி பெற்று வருகின்றனர். மேலும் 20 பேர் அடுத்த மாதம் முற்பகுதியில் எமது நிறுவகத்தில் பயிற்சி பெறுவதற்கு இலங்கை வரவுள்ளனர்.

நேபாளம், பூட்டான் ஆகிய நாடுகளும் ஆசிரியர்களை இலங்கைக்கு பயிற்சி பெறுவதற்காக அனுப்பவுள்ளன என்றார்.

இதேவேளை, வெளிநாட்டு மாணவர்கள் அல்லது ஆசிரியர்களுக்கான பயிற்சிக் கட்டணம் ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. ([illegible]-10)

---

# அரச ஊழியர் தமிழ்மொழி போதனை

(கொழும்பு)

சப்பிரகமுவ மாகாண நிர்வாகத்தின் கீழ் கடமையுரியும் அரச ஊழியர்களுக்கு தமிழ்மொழி கற்பிக்கப்படவுள்ளது. பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் தவிர்ந்த ஏனைய அரச சேவையில் உள்ளவர்களுக்கே தமிழ்மொழி கற்பிக்கப்படவுள்ளது.

இதற்கமைய, தமிழ்மொழியைக் கற்க விரும்பும் அரச ஊழியர்கள் இம்மாதம் 20ஆம் திகதிக்கு முன்னர் தமது விண்ணப்பங்களை அனுப்ப வேண்டும் என மாகாணசபை அலுவலகம் அறிவித்துள்ளது.

மாதம் ஒன்றுக்கு [illegible] வீதம் தொடர்ந்து 9 மாதங்[illegible] இவ் வகுப்பு நடைபெறவுள்ளது. (தி)

## நல்லையில் இன்று

(யாழ்ப்பாணம்)

நல்லூர் முருகன் ஆலய உற்சவத்தையொட்டி இளங்கலைஞர் மன்றத்தின் ஏற்பாட்டில் நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் இடம்பெற்றுவரும் தெய்வீக இசையரங்கில் 16 ஆம் திருவிழாவான இன்று சாரதா பரஞ்சோதியின் பாட்டுக்கச்சேரி இடம்பெறவுள்ளது.

* * *

நல்லைக்கந்தன் உற்சவத்தையொட்டி யாழ்.மாவட்ட வடபிரதேச இந்துப்பேரவை ஏற்பாட்டில் ஆலயத் தேரடியில் அமைந்துள்ள அறுபத்து மூன்று நாயன்மார் குருபூசை மடத்தில் இடம்பெற்றுவரும் தெய்வீக இசைத்தொடரில் இன்று மாலை 6.00மணிக்கு 'நால்வர் காட்டிய நன்னெறி' எனும் பொருளில் யாழ். பல்கலைக்கழக இந்து நாகரீகத் துறை விரிவுரையாளர் கலாநிதி மா.வேதநாதன் சொற்பொழிவாற்றவுள்ளார்.

* * *

நல்லூர்க் கந்தன் வருடாந்த உற்சவத்தையொட்டி நல்லூர் மேற்கு வீதி ஸ்ரீமுத்துவிநாயகர் மண்டப அரங்கில் பிரம்மஸ்ரீ சிவ.வை.நித்தியானந்த சர்மா நிகழ்த்திவரும் 'திருவிளையாடற் புராணம்' தொடரில் இன்று 'தருமிக்கு பொற்கிழி' என்ற விடயம்பற்றி இசைப் பேருரை இடம்பெறவுள்ளது. (18)

## வீதி புனரமைப்பு

(யாழ்ப்பாணம்)

ஊாகாவற்றுறை கரம்பன் புனித-செபஸ்தியார் ஆலயச் சந்தியிலிருந்து செருக்கன்சந்தி வரையிலான வீதி தற்பொழுது புனரமைக்கப்பட்டுள்ளது. கடந்த 20வருட காலமாக இவ்வீதி கவனிக்கப்படாமல் குன்றும் குழியுமாக இருந்தமை குறிப்பிடத்தக்கது. (பி)

## குருத்துவ பொன்விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம்,மிருசுவில்,ஊர்காவற்றுறை போன்ற இடங்களில் கடமை புரிந்து தற்பொழுது மன்னார் ஆயர் இல்லத்தில் இருக்கும் அருட்திரு பிரான்சஸ் குலாஸ் அடிகள் அண்மையில் தமது குருத்துவத்தின் ஐம்பதாவது நிறைவு விழாவை தமது வங்காலைப் பங்கில் கொண்டாடினார். இவர் வங்காலையின் முதற்குருவென்பது குறிப்பிடத்தக்கது. (பி)

## மீன்சந்தை திறப்பு

(மருதங்கேணி)

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள வத்திராயன் கடற்றொழிலாளர் சங்கம் கடந்தவாரம் மீன் சந்தை ஒன்றை திறந்துவைத்துள்ளது.

கடற்றொழிலாளர்களின் நன்மை கருதி வத்திராயன் உதயசூரியன் விளையாட்டு மைதானத்திற்கு அருகாமையில் இவ் மீன்சந்தை திறந்து வைக்கப்பட்டுள்ளது. (பி-35)

## சைவசமய பொதுஅறிவுப் போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

வேலணை பெருங்குளம் அருள்மிகு ஸ்ரீமுத்துமாரி அம்மன்ஆலய வருடாந்த மகோற்சவத்தை முன்னிட்டு வேலணை இந்து வளர்ச்சிக் கழகம் யாழ்ப்பாணம் மதனா நகையகத்தின் ஆதரவுடன் நடத்திய சைவசமய பொதுஅறிவுப் போட்டியின் முடிவுகள் பின்வருமாறு.

முதலாம் இடம்: செல்வன் கருணாகரன்,தேவபாலன்,இரண்டாம் இடம்: செல்வி கிரிவாசினி கெங்கேஸ்வரசர்மா, மூன்றாம் இடம்:செல்வி விஜிதர்சினி வர்ணகுலசிங்கம் மற்றுமஎட்டுஆறுதல்பரிசில் களுமஊக்குவிப்புப் பரிசில்களாக ஐந்து பரிசுகளும் கொடுக்கபபடவுள்ளன. (பி)

## முன்னாள்பாராளுமன்ற உறுப்பினர்சங்கம் அங்குரார்ப்பணம்

(கொழும்பு)

இளைப்பாறிய பாராளுமன்ற அங்கத்தவர்கள், சங்கம் ஒன்றை அணமையில் அங்குரார்ப்பணம் செய்துள்ளனர்.

"முன்னாள் பாராளுமன்ற உத்தியோகத்தர்கள் சங்கம்"என்ற பெயரில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்ட இச்சங்கத்தில் பாராளுமன்ற சேவையில் இருந்து இளைப்பாறிய சகல வகையான ஊழியர்களும் அங்கம் பெறுவர்.

பாராளுமன்ற சேவையில் ஏற்படும் வெற்றிடங்களை நிரப்பும்போது இளைப்பாறிய, இளைப்பாற இருக்கும் உத்தியோகத்தர்களின் பிள்ளைகளுக்கு முன்னுரிமை வழங்கப்படவுள்ளது குறிப்பிடத்தக்கது. (தி)

## வவுனியாவில் 100 குளங்கள் புனரமைக்கப்படும்

(மருதங்கேணி)

வவுனியா மாவட்டத்தில் நியாப் திட்டத்தின் கீழ் 100 குளங்கள் புனரமைக்கப்படவுள்ளன. இவற்றில் 20 குளங்கள் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ளனவென தெரிவிக்கப்படுகிறது.

மேலும், வவுனியா மாவட்டத்தில் மீளக்குடியமர்ந்த மக்களுக்கான அடிப்படை வசதிகளை மேற்கொள்வதற்கு ஆசிய அபிவிருத்திவங்கி 30மில்லியன் ரூபாவை வழங்கியுள்ளதாகத் தெரியவருகிறது.(பி-35)

## அன்னைஅமலியின் ஆரோகணத் திருவிழா

(யாழ்ப்பாணம்)

கடந்த 15ந் திகதி வெள்ளிக் கிழமை காலை 7.00மணிக்கு காவலூர் புனித மரியன்னை ஆலயத்தில் பங்குத்தந்தை அருட்திரு.ஏ.ஞானப் பிரகாசம் அடிகள் தலைமையில் அன்னை அமலியின் ஆரோகணத் திருவிழா அமைதியாகவும் பக்தி பூர்வமாகவும் நடைபெற்றது. (பி)

## பயிற்சிப் பட்டறை

(கொழும்புத்துறை)

திருமறைக் கலாமன்றத்தின் ஏற்பாட்டில் எதிர்வரும் 21ஆம் திகதி முதல் 23ஆம் திகதிவரை மறைக் கல்வி நடுநிலையத்தில் முல்லைத் தீவு மற்றும் உரும்பிராய் பிரதேச திருமறைக் கலாமன்றக் கலைஞர்களுக்கான தொடர் பயிற்சிப்பட்டறை இடம்பெறவுள்ளது.

''படைப்பாக்கமும் ஆளுமை விருத்தியும்" எனும் கருப்பொருளில் இடம்பெறவுள்ள மேற்படி பயிற்சிப் பட்டறைக்காக 40 கலைஞர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

இலங்கையின் அனைத்து மாவட்டக் கலைஞர்களுக்கும் அண்மையில் மேற்படி பயிற்சி வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (உ-51)

## பரந்தன் நெற் களஞ்சியத்தில் குடியிருப்போரை அகற்ற ஏற்பாடு

(கிளிநொச்சி)

பரந்தன் நெற் களஞ்சியத்தில் குடியிருப்போரை அப்புறப்படுத்த உடன் நடவடிககை மேற்கொள்ளுவண்ணம் கிளிநொச்சி அரச அதிபர் கரைச்சி பிரதேச செயலருக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

பரந்தன் நெற் களஞ்சியத்தில் மக்கள் குடியமர்ந்துள்ளதால் நெல் களஞ்சியத்தை புனரமைக்க முடியவில்லை என நெற களஞ்சியத்தினர் கிளிநொச்சி அதிபரின் கவனத்திற்கு கொண்டுவந்ததையடுத்தே அரச அதிபர் பணிப்புரையை விடுத்துள்ளார். (பி)

## 10 மில்லியன் செலவில் மன்னார் அபிவிருத்தி

(மன்னார்)

உலக உணவுத்திட்டத்தின் நிதியுதவியுடன் மன்னார் மாவட்டத்தில் பல அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

10 மில்லியன் ரூபா செலவில் மடுபிரதேசத்தில் உள்ள குளங்கள் வாய்க்கால்கள் என்பன புனரமைக்கப்படுவதுடன், இப்பிரதேசத்தில் உள்ள பாலர் பாடசாலைகளும் உட்பட அனைத்துப் பாடசாலைகளும் திருத்தி அமைக்கப்படவுள்ளன.

புனர்வாழ்வு மீள்குடியேற்ற அகதிகள் விவகார அமைச்சர் ஜயலத் ஜெயவர்த்தன கடந்த வெள்ளிக் கிழமை இத்திட்டங்களை ஆரம்பித்து வைத்தார். (தி)

## பாம்புக்கடிக்கு சிகிச்சைபெறுவோர் அதிகரிப்பு

(மருதங்கேணி)

நயினா மடு தியாக தீபம் திலீபன் மருத்துவமனையில் பாம்புக் கடிக்கு இலக்கான பலர் தினமும் சிகிச்சைபெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஓயாத அலைகள் 03 நடவடிக்கை மூலம் மீட்கப்பட்ட வவுனியா மாவட்டத்தின் நயினா மடு பகுதியில் அமைந்துள்ள இவ் மருத்துவமனை மூலம் அனந்த புலியங்குளம், பரந்தன அகிலடி, கரப்புக்குத்தி, சின்ன பூவரசங்குளம், விஞ்ஞானகுளம், தச்சடமபன், சேமமடு, பரந்தன், நயினா மடு ஆகிய பகுதிகளிலிருந்து பெருமளவிலானோர் சிகிச்சைபெற்று வருகின்றனர். (உ-35)

## மருந்தாளர் பயிற்சிநெறி

(யாழ்ப்பாணம்)

வட-கிழக்கு மாகாண சுகாதார அமைசசு இவ்வருடத்திற்கான மருநதாளர் பயிற்சிநெறியை யாழ்ப்பாணம், திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய மூன்று இடங்களிலுள்ள நிலையங்களில் நடாத்தவுள்ளது.

இலங்கை மருத்துவசபை நடாத்தும் வெளிவாரி மருந்தாளர் பரீட்சைக்குத் தயார்படுத்தும் முகமாக இப்பயிற்சிநெறி நடாத்தப்படவுள்ளதாகவும், வட-கிழக்கை நிரந்தர வதிவிடமாகக் கொண்ட க.பொ.த. (சா/த) சித்தியடைந்த 40 வயதுக் குட்பட்ட ஆண், பெண் இருபாலரும் இப்பயிற்சிநெறிக்கு விண்ணப்பிக்க முடியுமெனவும் அமைச்சின் மாகாணப் பணிப்பாளர் டாக்டர் எஸ்.குமாரவேற்பிள்ளை அறிவித்துள்ளார்.

இதற்கான விண்ணப்ப முடிவுத் தினம் இம்மாதம் 27ஆம் திகதியாகும். (உ)

## பரதநாட்டிய அரங்கேற்றம்

(கொழும்புத்துறை)

வவுனியா திருமறைக்கலாமன்ற மாணவிகளின் பரதநாட்டிய அரங்கேற்றம் எதிர்வரும் 31ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை பி.ப 6.30மணிக்கு இறம்பைக்குளம் மகளிர் மகாவித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் வவுனியா மாவட்ட நீதிபதி ம.இளஞ்செழியன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார்.

* * *

திருமறைக்கலாமன்ற மாணவியான செல்வி தர்மினி எட்வேட் பிரேம்குமாரனின் பரதநாட்டிய அரங்கேற்றம் எதிர்வரும் 24ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி.ப.3.00 மணிக்கு யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வில்,யாழ்.பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேராசிரியர் எஸ்.மோகனதாஸ் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார். (பி-51)

## கையுறைகள் அன்பளிப்பு

(மருதங்கேணி)

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு கலிபோர்னியா நாட்டில் வசிக்கும் தமிழ்க் குடும்பம் ஒன்று 500 கையுறைகளை அனுப்பிவைத்துள்ளது.

இக் கையுறைகளை அரச அதிபர் தி.இராசநாயகம் கிளி. மாவட்ட சுகாதாரசேவை பிரதிபணிப்பாளர் வைத்திய கலாநிதி த.சத்தியமூர்த்தியிடம் அண்மையில் கையளித்துள்ளார். (உ-35)

## முன்பள்ளி ஆசிரியர் தெரிவு

(சுதுமலை)

வலி.தென்மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட முன்பள்ளிகளில் நிலவும் வெற்றிடத்தை நிவர்த்திசெய்யும் முகமாக முன்பள்ளி ஆசிரியர்கள் புதிதாக நியமிக்கப்படவுள்ளனர்.

இவர்களைத் தெரிவுசெய்வதற்கான நேர்முகத்தேர்வு கடந்தவாரம் செயலாளர் பி.விக்ரா தலைமையில் இடம்பெற்றது. (உ-252)

## நில அளவையாளரின்றி பெரும் சிரமம்

(மருதங்கேணி)

முல்லை மாவட்டத்தில் நில அளவையாளர் எவரும் நியமிக்கப்படாததால காணிகள் சம்பந்தமாகவோ பிரதேச எல்லைகள் சம்பந்தமாக அளவைகள் மேற்கொண்டு திட்ட வரைவுகளை மேற்கொள்ளவோ பெரும் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளதாக முல்லை மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி சுகுமார் தெரிவித்துள்ளார். (உ-35)

## நல்லூரான் திருவடிக்கு

(இன்று பதினாறாம் திருவிழா)



### வேலவனே உடனாக அருள்!

நல்லையி லேகந்தக் கோட்டம்-அங்கு
நாளும் பெருகுது கூட்டம்
தொல்லை தரும்மன வாட்டம்-எல்லாம்
துகளாக்கும் கந்தன்கண் ணோட்டம்!

கந்தனுக் கின்கவி ஆக்கி-நல்ல
காவடி ஆடுவோம் தூக்கி!
எந்த வினைகளும் நீக்கி-சுகம்
எய்தவைப் பான்இடர் போக்கி!

நாட்டில் அமைதியுண் டாக-பகை
நம்மிடை யேஅற்றுப் போக
வீட்டில் மிகுசுக மாக-அருள்
வேலவ னேஉட னேவா

வ.சின்னப்பா , தனங்கிளப்பு.

### வந்தே ஒருமுறை பாரப்பா

உன்னைத் தேடி வருகின்றேன்
எங்கும் காண முடியவில்லை
என்னைக் காண உந்தனுக்கு
விருப்பம் ஏனோ வரவில்லை!

உள்ளே இருப்பாய் என்றெண்ணி
உள்ளே தினமும் செல்கின்றேன்
அள்ளிப் பாலால் அபிசேகம்
ஆராதனைகள் பல செய்தும்

கல்லாய் நீயும் இருப்பதென்ன
குறைகள் கேட்க மறுப்பதென்ன
சொல்வாய் தத்துவப் பொருளோனே
தமிழின் சங்கத் தலைமகனே!

உந்தன் ஆலய வீதியெங்கும்
அலைவது தானென் விதியோ
வந்தே ஒருமுறை பாரப்பா
நல்லைப் பதியுறை வடிவேலா!

அரியாலையூர், சி.சிவதாசன்.

### கொடுவினைகள் முழுவதுமாய் அகலுங்காணே

கண்ணானைக் கண்ணிலுள்ளே ஒளியானானை
கார்த்திகைப்பெண் வளர்த்தெடுத்த கருவூரானை
பண்ணாரும் பதிகங்கள் புகழ்ந்து பாடும்
புலவர்க்கெலாம் ஞானத்தை அருளினானை
விண்ணாரும் கோபுரமும் மணியும் சேர்ந்த
நல்லூரில் அமர்ந்திருக்கும் முருகவேளை
கண்ணாலே நீர்சொரிய வணங்கி நின்றால்
கொடுவினைகள் முழுவதுமே யகலுங்காணே

கவிமணி கந்தமுருகேச தாசனார்.

தக்கார் தகவிலார் என்பது அவரவர்
எச்சத்தால் காணப் படும்.
– குறள்

# வலம்புரி

## நிதானம் அவசியம்

தமிழீழக் கவிஞர் புதுவை இரத்தினதுரையின் நூல் வெளியீட்டு விழா இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசமான வவுனியாவில் இடம் பெற்றபோது அந் நிகழ்வின் ஆரம்பத்தில் புலிக் கொடியேற்றுவதைத் தடுப்பதில் கண்காணிப்புக் குழு ஈடுபட்டுள்ளமை,சமாதானத்தை விரும்புபவர்களைப் பெரும் அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது. அரசும் விடுதலைப் புலிகளும் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொண்டமை இரு தரப்பும் சமபலமுடையவை-சம அந்தஸ்துள்ளவை என்ற நிபந்தனையின் அடிப்படையில் என்பதை எவரும் மறந்து விடமுடியாது. ஓர் நாட்டின் அரசாங்கம் ஓர் விடுதலை அமைப்புடன் புரிந்துணர்வை ஏற்படுத்திக் கொண்ட பின்னர் அந்த அமைப்பின் கொடியை ஏற்றுவதில் எந்தத் தவறும் இருக்க முடியாது. ஆனால், கண்காணிப்புக் குழு அதனைத் தடுக்க முற்பட்டமையானது, கண்காணிப்புக்குழுவின் நடுநிலைத் தன்மையில் ஐயுறவை ஏற்படுத்துவதாகவுள்ளது.

நாட்டில் தீர்க்கப்பட வேண்டிய எத்தனையோ பிரச்சினைகள் இருக்கும் போது புலிக் கொடி ஏற்றுவதை பெரிதுபடுத்தி புலிகள் சமாதான முயற்சிக்கு எதிரான செயற்பாடுகளில் ஈடுபடுவது போல ஓர் மாயைத் தோற்றத்தை கண்காணிப்புக குழு காட்ட முற்பட்டுள்ளதா என்ற கேள்வி தமிழ் மக்களிடம் எழுந்துள்ளது. ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தலைமையிலான பொது ஜன ஐக்கிய முன்னணி ஆட்சிக்கு வந்த போது புலிகளுடன் சமாதானப் பேச்சுவார்த்தை நடத்தியது. அப் பேச்சுவார்த்தை யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற போது அரச பிரதிநிதிகள் புலிக் கொடியைத் தாங்கிய மேசையில் இருந்து கொண்டே பேச்சுக்களை நடத்தினர்.அது மட்டுமன்றி தமிழீழத்தைக் குறிக்கும் தேசப்படமும் பேச்சுவார்த்தை நடந்த இடத்தில் வைக்கப்பட்டிருந்தது.

ஆனால் இப்போது விடுதலைப் புலிகள் தமிழ் மண்ணில் நடத்துகின்ற ஓர் நிகழ்வில் புலிக் கொடியை ஏற்றி, சம்பிரதாயமாக நிகழ்வை ஆரம்பிப்பதை கண்காணிப்புக குழு தடுக்க முற்பட்டமை மிகவும் பாரதூரமான தவறாகும்.

தமிழர் தாயகத்தில் உயர் பாதுகாப்பு வலயத்தைப் பிரகடனப்படுத்தி, அப் பகுதியில் காலாகாலமாக வாழ்ந்த மக்கள் அங்கு மீண்டும் குடியமர்வதற்குத் தடைபிறப்பிக்கும் இராணுவத்தின் போக்கில் இம்மியேனும் குறைகாணாத கண்காணிப்புக்குழு தனக்குத் தொடர்பில்லாத, சமாதான முயற்சியை எவ்வகையிலும் பாதிக்காத் புலிக்கொடி ஏற்றும் நிகழ்வை தடுக்க முற்பட்டமை புலிகள் கண்காணிப்புக் குழுவின் அறிவுறுத்தல்களுக்குக் கட்டுப்படவில்லை என்பதை உலகுக் காட்டமுற்பட்டதாகவே கருத வேண்டியுள்ளது.

15 ஆயிரத்துக்கும் மேற்பட்ட போராளிகளை ஈந்தளித்த தமிழ் மண்ணில் புலிக் கொடி ஏற்றுவதைத் தடுக்க கண்காணிபுக்குழு முற்படுமாயின் அதற்குக் காரணம் ஈழப் போராட்ட வரலாற்றை சரியான முறையில் கண்காணிப்புக்குழு அறிந்து கொள்ளாததன் விளைவாகவே இருக்க முடியும்.

## மின்விநியோகம் விஸ்தரிப்பு

(கொழும்பு)

அடுத்துவரும் ஒருவருடத்திற்குள் வடக்கு-கிழக்கில் கிராமப் புற மின்விநியோகத் திட்டங்களை முன்னெடுக்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. இதற்கென 10லட்சத்து 10 ஆயிரத்து 400ரூபா செலவிடப்படவுள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

அத்துடன் பாதை புனரமைப்பு அபிவிருத்திப் பணிகளை முன்னெடுக்கவும் அமைச்சரவை தீர்மானித்துள்ள தெனவும், இதற்கென மாதாந்தம் 200மில்லியன் ரூபா செலவிடப்படும் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (தி-8)

## தென்மராட்சிப் பகுதியில்

# படையினர் அனுமதித்த விளைநிலங்களை பார்வையிட விவசாயிகளுக்கு அழைப்பு

(யாழ்ப்பாணம்)

மறவன்புலோ வடக்கில் அண்மையில் படையினரால் மீளளிப்பு செய்யப்பட்ட விளைநிலங்களைப் பார்வையிடும் பொருட்டு எதிர்வரும் 21ஆம் திகதி வியாழக்கிழமை மு.ப.9.00மணிக்கு கோகிலாக்கண்டி மகாலட்சுமி வித்தியாலயத்திற்கு விளை நில உரிமையாளர்களை வருகை தருமாறு விவசாய சம்மேளனத் தலைவர் மா.லீலா வினோதன் கேட்டுள்ளார்.

சாவகச்சேரி தெற்கில் 1996ஆம் ஆண்டில் இருந்து இராணுவ ஆக்கிரமிப்பால் உயர் பாதுகாப்பு வலயமாக பிரகடனப்படுத்தப்பட்ட 5ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பை விவசாயிகளிடம் ஒப்படைக்கப் படையினர் அண்மையில் இணங்கியுள்ளமையினை அடுத்தே இத்தகைய முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு விவசாயிகளை மேற்படி பகுதிக்கு அழைத்துச் செல்வதனால் எதிர்காலத்தில் ஏற்படும் சிக்கல்களை சுலபமாக கையாளுவதற்கு ஏற்றதாக இருக்கும்என தெரிவித்த விவசாய சம்மேளனத் தலைவர் லீலா வினோதன், தென்மராட்சி பிரதேச செயலர் எஸ்.ஸ்ரீனிவாசன் இப்பகுதி கமநல உத்தியோகத்தர் எஸ்.தவராசா ஆகியோர் படைஅதிகாரிகளின் உதவியுடன் விவசாயகளை அழைத்து செல்வார்கள் என்றார்.

இதேவேளை, தென்மராட்சி உயர் பாதுகாப்பு பிரதேசத்தில் காலபோக பயிர்ச்செய்கையில் ஈடுபடும் விவசாயிகள் படையினரால் விநியோகிக்கப்படும் விசேட அடையாளஅட்டையினைப் பெற்றிருத்தல் வேண்டும் என்றும்,

குறிப்பிட்ட அடையாள அட்டையை வைத்திருப்போர் மட்டுமே விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட அனுமதிக்கப்படுவர் என்றும் படையினரால் அறிவிக்கப்பட்டுள்ளது தெரிந்ததே (தி-4,10)

## புலமைப்பரிசில் பெறும் மாணவர் எண்ணிக்கை அதிகரிப்பு

(கொழும்பு)

சிசுசவியத் திட்டத்தின்கீழ் புலமைப்பரிசில் பெறும் மாணவர்களின் எண்ணிக்கையினை அதிகரிக்க கல்வியமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு நடவடிக்கை எடுத்துள்ளார்.

இதற்கமைய புலமைப்பரிசில் பெறும் மாணவர்களின் எண்ணிக்கை 10ஆயிரத்தில் இருந்து 20ஆயிரமாக அதிகரிக்கப்படவுள்ளது.

வறுமைக்கோட்டின்கீழ் வாழும் பிள்ளைகளின் கல்வி மேம்பாட்டிற்காக இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் மாணவர் ஒருவருக்கு மாதாந்தம் 500ரூபா புலமைப்பரிசில் வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

இதேவேளை, வசதி குறைந்த பாடசாலைகளில் கல்விபயிலும் மாணவர்களுக்கு காலைஉணவு வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக கல்விஅமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (தி)

## காவலரணுக்கு அருகாக மீன் சந்தையை இடமாற்றுமாறு படையினர் அச்சுறுத்தல்

(யாழ்ப்பாணம்)

சுழிபுரம் கடற்கரைப் பகுதியில் இருந்த மீன் சந்தையை படையினர் தம் காவலரணுக்குச் சமீபமாகச் இடமாற்றம் செய்யுமாறு எச்சரித்துள்ளதால் மீன் வியாபாரிகள் பெரும் இன்னல்களை எதிர்நோக்கி வருவதாகத் தெரியவருகின்றது.

கடந்த பல காலமாக திருவடிநிலை சைவத்தமிழ்க் கலவன் பாடசாலைக்கு அண்மையாக இயங்கி வந்த இம் மீன்சந்தையை அங்கிருந்து 500மீற்றர் தொலைவில் உள்ள தம் காவலரணை அண்மித்த மர நிழல்களோ, தற்காலிக கொட்டகைகளோ அன்றி வெட்ட வெளிப் பிரதேசத்திற்கு இடமாற்றுமாறு படையினர் நிர்ப்பந்தித்து வருகின்றனர்.

கடற்படையினரின் இவ்வாறான செயற்பாடுகள்பற்றி கருத்து தெரிவித்த சுழிபுரம் மேற்கு கடற்றொழிலாளர் சங்கப் பிரதிநிதிகள், அண்மையில் சுழிபுரம் கடற்பரப்பில் வைத்து அத்துமீறி மீன்பிடித்துக் கொண்டிருந்த இந்திய மீனவர்கள் நால்வரை எம்மீனவர்கள் கைது செய்து கடற்படையினரின் சொற்படி அவர்களை விடுதலை செய்யாது பொலிஸாரிடம் ஒப்படைத்தமைக்கு பழிவாங்கும் செயற்பாடுகளாகவே தாம் இதைக் கருதுவதாகவும் தெரிவித்தனர்.

சவுக்கடி, புளியந்துறை, திருவடிநிலை ஆகிய கடற்றொழிலாளர் சங்கங்களுக்கு உட்பட்ட பிரதேச மீனவர்கள்மீது பாஸ் மற்றும் சோதனைக் கெடுபிடிகளையும் படையினர் தீவிரப்படுத்தி இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (உ-4)

## ஊடகவியலாளர்களுக்கு வீடமைப்பு கடன்வழங்க ஏற்பாடு

(கொழும்பு)

ஊடகவியலாளர்களுக்கான வீடமைப்புக் கடன்களை குறைந்த வட்டி வீதத்தில் வழங்க வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன வங்கி உத்தேசித்துள்ளது.

இதுகுறித்து வீடமைப்புஅபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கியின் தலைவர் ஏ.கந்தப்பா கருத்து வெளியிடுகையில்,

வீட்டுக்கடன்களைக் கோரும் ஊடகவியலாளர்கள் அனைவரும் ஒரே அமைப்பாக இணைந்து கோரிக்கையை முன்வைத்தால், அரசின் அங்கீகாரத்தைப் பெற்று எதிர்காலத்தில் இதற்கென விசேட திட்டமொன்றை நடைமுறைப்படுத்த முடியும்.

மலையகப் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்குத் தற்போது அவர்களின் ஊழியர் சேமலாப நிதி மூலம் கடன்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

வடக்கு-கிழக்கு மற்றும் மலையகப் பகுதிகளில் எமது திட்டங்களை மேலும் விஸ்தரிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளபோதும், வடக்கில் இது தற்போது சாத்தியமற்றதாகவே காணப்படுகின்றது எனவும் தெரிவித்துள்ளார். (தி)

## பனம் விதை நாட்டல்

(கந்தரோடை)

வலிகாமம் பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தினால் ஆண்டுதோறும் மேற்கொள்ளப்பட்டுவரும் சமூக மேம்பாட்டுத் திட்டங்களின் ஒரு பகுதியாக மானிப்பாய், கல்லுண்டாய் ஆகிய வெளிகளில் 3ஆயிரம் பனம்விதைகளை நட மேற்படி சங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. (தி-103)

# பேச்சு மூலம் தீர்வுகாண வேண்டும் கருத்துக் கணிப்புக்கள் தெரிவிப்பு

## அமைச்சர் இம்தியாஸ் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

நாட்டின் பெரும்பான்மையான மக்கள் பேச்சுவார்த்தைகள் மூலம் இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்பட வேண்டும் என விரும்புவதாக கருத்துக்கணிப்பின்மூலம் தெரிய வந்துள்ளது.

இவ்வாறு மக்கள் தொடர்பாடல் அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் மீகஹதன நகரில் நடைபெற்ற புதிய கட்டடத் திறப்புவிழா நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போது அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அந்நிகழ்வில் தொடர்ந்து பேசிய அவர், சிங்கள மக்களின் குறிப்பிட்ட ஒரு தொகுதியினரைத்தவிர, பெரும்பான்மையானோர் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவந்து, சமாதானப் பேச்சுவார்த்தைகள் மூலம் இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்படுவதையே விரும்புகின்றனர்.

தபால் சேவைகளை வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்வதற்கு சமாதான முயற்சிகள் உறுதுணையாக இருந்து வருகின்றன.

பொதுஜன ஐக்கிய முன்னணி, சமசமாசக் கட்சி ஆகியற்றின் பெரும்பான்மையான உறுப்பினர்கள் சமாதான நடவடிக்கைகள் ஊடாக தீர்வு காணப்பட வேண்டுமென்பதை வரவேற்கின்றனர் எனவும் அவர்மேலும் தெரிவித்துள்ளார். (தி)

## வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்ட சட்டத்தரணிக்கு விளக்கமறியல்

(கொழும்பு)

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பல்மருத்துவ பீட கண்காட்சியில் பொருட்களுக்குச் சேதம் விளைவித்த சட்டத்தரணி ஒருவரை நேற்று முன்தினம் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

பேராதனை மேலதிக நீதிவான் முன்னிலையில் நேற்று முன்தினம் ஆஜர்ப்படுத்திய போது இவரை எதிர்வரும் 21ஆம் திகதிவரை விளக்கமறியில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிடுள்ளார்.

பல் மருத்துவபீட கண்காட்சியைப் பார்க்கவந்த மேற்படி சட்டத்தரணிக்கும் மாணவர்களுக்கும் இடையே ஏற்பட்ட வாய்த்தர்க்கத்தை அடுத்து காட்சிக்கு வைக்கப்பட்ட பொருட்களுக்கு சேதம் விளைவித்தார்.

இச்சம்பவத்தினால் சுமார் 60 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருட்கள் சேதமடைந்துள்ளன என பொலிசில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதுடன், இரு மாணவர்களும் காயமடைந்துள்ளனர். (தி)

## சர்வதேச மனித உரிமைகள் குழு இலங்கை விஜயம்

(கொழும்பு)

சர்வதேச மனித உரிமைகள் குழுவொன்று அடுத்த வாரமளவில் இலங்கைக்கான விஜயமொன்றை மேற்கொள்ளவுள்ளது.

இலங்கையில் தற்போது முன்னெடுக்கப்பட்டுவரும் சமாதான நடவடிக்கைகளின் போது மீறப்பட்டுவரும் மனித உரிமைகள் தொடர்பாக ஆராய்வதற்காகவே இக்குழுவினர் விஜயம் செய்யவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை அரசியல் விரோதிகளையும் பாதுகாப்புப் படையைச் சேர்ந்த உறுப்பினர்களையும் விடுதலைப்புலிகள் படுகொலை செய்துவருவதாக சர்வதேச மனித உரிமைகள் அமைப்பு அண்மையில் வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில தெரிவித்திருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (10)

### முறைப்பாடு செய்யலாம்

தீவக மக்கள் தமது முறைப்பாடுகளை ஊர்காவற்துறை பொலிஸ் நிலைய தலைமைப் பொலிஸ் அதிகாரியின் அலுவலகத்தில் நேரில் சென்று தெரிவிக்கலாம்.அன்றியும் தினமும் மு.ப.10மணி முதல்ஒரு மணி வரையும் பி.ப.6மணிக்குப் பின்னரும் தொலைபேசி இலக்கம் 021-222 2090 உடன் தொடர்பு கொள்ளலாம் என தெரிவிக்கப்படுகின்றது.(பி)

## தினசரி தியானம்

### ஆற்றல்

அழகியமனம், நல்ல ஆரோக்கியமான உடல் மற்றும் பல அபூர்வமான கொடைகளை இறைவன் உங்களுக்குத் தந்திருக்கின்றார். தீய பழக்கங்களை மாற்றிக்கொண்டு, இராமநாமத்தின் துணையாலும், ஜெபம் தியானம் ஆகியவற்றின் துணையாலும் கண்ணிமைக்கும் நேரத்தில் மனத்தையும், இதயத்தையும் திருத்திக் கொள்ளுங்கள். இந்த நொடியிலேயே ஆரோக்கியமான மேலான ஆன்மீகப் பழக்கங்களை வளர்த்துக்கொள்ள முடியும்.எல்லையற்ற ஆற்றல் உங்களிடம் இருக்கின்றது. ஜெபத்தின் மூலம் அவற்றைக் கட்டியெழுப்புங்கள்.

சுவாமி சிவானந்தர்

## இந்திய மீனவர்களைப் பிடித்தால் என்ன செய்வது?

# வடமராட்சி மீனவர்களுக்கு பரு. பொலிஸார் விளக்கம்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி வடக்கு மீனவர் சங்கங்களின் பிரதிநிதிகளுக்கும் பருத்தித்துறைப் பொலிஸாருக்குமிடையிலான கலந்துரையாடல் ஒன்று நேற்றுப் பருத்தித்துறைப் பொலிஸ்நிலையத்தில் இடம்பெற்றது.

கலந்துரையாடலில் வடமராட்சிக் கடலில் இந்திய மீனவர்களின் அத்துமீறல் குறித்தும் அது தொடர்பில் வடமராட்சிப் பகுதி மீனவர்கள் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் விளக்கமளிக்கப்பட்டது.

வடமராட்சிப் பகுதி மீனவர்கள் தாம் பிடிக்கும் இந்திய மீனவர்களை உடனடியாகப் பொலிஸாரிடம் ஒப்படைக்குமாறும் அவ்வாறு ஒப்படைக்கத் தவறும் பட்சத்தில் சம்பந்தப்பட்ட மீனவர்கள் சட்ட நடவடிக்கைகளை எதிர்கொள்ள நேரிடுமென்றும் பொலிஸ்மா அதிபர் எச்சரித்துள்ளதாக பொலிஸார் அங்கு தெரிவித்தனர்.

பொலிஸ்மா அதிபரின் பணிப்பின் பேரிலேயே மேற்படி கலந்துரையாடலுக்கான ஏற்பாடு செய்யப்பட்டது. அத்துடன் பொலிஸ்மா அதிபர் அனுப்பி வைத்த அறிவுறுத்தல் கடிதம் ஒன்றும் கலந்துரையாடலில் வாசித்துக்காட்டப்பட்டது.

இதேவேளை இந்திய மீனவர்கள் கடலில் அத்துமீறிப் பிரவேசிப்பது குறித்து இலங்கைக்கான இந்தியத் தூதுவர் நிருபம் சென்னுடன் தாம் கலந்துரையாடியுள்ளதாகவும் இது விடயம் குறித்து உரியநடவடிக்கைகளை எடுப்பதற்கு தாம் முயல்வதாக தூதுவர் உறுதியளித்துள்ளதாகவும் பொலிஸ்மா அதிபர் அனுப்பி வைத்த கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (த)

## கலந்துரையாடல் ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

நாளை செவ்வாய்க்கிழமை யாழ். மாவட்ட செயலகத்தில் நடைபெறவிருந்த கலந்துரையாடல்கள், கூட்டங்கள் யாவும் பிற்போடப்பட்டுள்ளதாகவும் அவை யாவும் எதிர்வரும் 20 ஆம் திகதி வெள்ளிக்கிழமை குறித்த நேரங்களில் நடைபெறவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.(8)

## திரைப்படக் காட்சி

சலன சித்திர அமைப்பினர் தயாரித்த ''யாருக்கு யார் காவல்'' என்ற திரைப்படக் காட்சியும் கலந்துரையாடலும் இன்று மாலை 7மணிக்கு நெல்லியடி முருகன் கோயில் முன்றலில் நடைபெறவுள்ளது.

66 நிமிட நேரத்தைக் கொண்டமைந்த இத்திரைப்படம் கடந்த வருடம் சர்வதேச மனித உரிமைகள் தினத்தில் நெல்லியடியில் பொலிஸார் பொதுமக்கள் மீது நடத்திய தாக்குதல் சம்பவததை மையமாகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது. (5)

# புலிக்கொடி ஏற்றாமல் நாம் எந்த நிகழ்வையும் ஆரம்பிப்பதில்லை

(வவுனியா)

எந்தவொரு நிகழ்வையும் புலிக்கொடியேற்றாமல் நாம் ஆரம்பிப்பதில்லை என வவுனியா மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் எழிலன் தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியத்தின்படி புலிக்கொடியேற்றாமல் எந்தவொரு நிகழ்வும் இடம்பெறுவதில்லை. அதனடிப்படையில் நாம் எமது தலைமைத்துவத்தின் கட்டளைப்படி புலிக்கொடியேற்றியே எந்தவொரு நிகழ்வையும் மேற்கொள்வது வழக்கம். இதனை எவராலும் தடுக்க முடியாது. நாம் எமது பணியை மேற்கொள்வதற்காக வவுனியாவுக்கு வந்து எமது அலுவலகத்தை திறக்கும் போது புலிக்கொடியேற்றியே ஆரம்பித்தோம். அப்போது பார்த்துக்கொண்டிருந்த கண்காணிப்புக் குழுவும் இராணுவமும் இப்போது தடுக்கின்றன.

புலிக்கொடியேற்றுவதன் மூலம் எவருக்கும் எவ்வித பாதிப்பும் ஏற்படப்போவதில்லை. இவ்வாறான சம்பவங்களைக் காரணம் காட்டி இராணுவம் சமாதான முயற்சியைக் குழப்புவதற்கு முயல்கிறது என்றும் எழிலன் மேலும் தெரிவித்தார். (ந-5,13)

## நள்ளிரவில் கடையில் திருட்டு

(கந்தரோடை)

கந்தரோடை கந்தையா. உபாத்தியாயர் வீதியில் உள்ள ஒரு பலசரக்குக் கடைக்குள் நள்ளிரவு நேரத்தினுள் உட்புகுந்த திருடர்கள் ரூபா 25000 பெறுமதியான பொருட்களைத் திருடிச் சென்றுள்ளனர்.

கடையின் உரிமையாளர் அதிகாலை வியாபார நிலையத்தினைத் திறந்தபோதே சம்பவம் தெரியவந்தது. இது தொடர்பாக சுன்னாகம் பொலிஸ்நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (பி-103)

# முஸ்லிம் மீனவர் இருவரும் நேற்று விடுதலையாகினர்

(கொழும்பு)

மூதூரில் நேற்று முன்தினம் இனந தெரியாதோரால் கடத்திச் செல்லப்பட்ட இரு முஸ்லிம் மீனவர்களும் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் தற்போது திருகோணமலை வைத்தியசாலையில் வைத்திய பரிசோதனைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதேசமயம் மேற்படி இரு மீனவாகளையும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சித்தலைவரும், அமைச்சருமான ரவூப் ஹக்கீம் திருகோணமலை வைத்தியசாலைக்குச் சென்று பார்வையிட்டார்.

இது குறித்து அந்தப்பகுதி பாதுகாப்பு அதிகாரிகளுடன் கலந்துரையாடி மீனவர்கள் கடத்தப்பட்டதால் எழுந்துள்ள நிலைமையை கட்டுப்படுத்த எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் பற்றி எடுத்துரைத்ததாக தெரிவிக்கப்படுகிறது.

மேலும், அமைச்சர் ரவூப் ஹக்கீம் இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவைச் சந்தித்து மூதூர் நிலைமை பற்றி ஆராய விருப்பதாகவும் கூறப்படுகிறது.

மூதூர் நாவலடி கடற்பிரதேசத்தில் வைத்து நேற்று முன்தினம் இனந்தெரியாதோரால் முஸ்லிம் மீனவர்கள் இருவரும் கடத்தப்பட்டமையினையடுத்து அப் பகுதியில் உள்ள முஸ்லிம்கள் கலவரத்தில் ஈடுபட்டிருந்தமையும் அதனைக் கட்டுப்படுத்த பொலிஸார் ஊரடங்குச் சட்டத்தை அமுல்படுத்தியமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (தி-10)

## அரசுக்கு வழங்கிவரும்...

வேணடிய யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரின் நழுவல் போக்கையும் சுட்டிக்காட்டியுள்ளோம்.

இத்தகைய சம்பவங்கள் தொடர்பாக யுத்த நிறுத்த கண்காணிப்புக் குழு ஊடாக விடுதலைப் புலிகளுடன் சந்திப்புக்களை ஏற்படுத்திக் கொள்வதற்கு எடுத்த முயற்சிகள் எதுவும் பலனளிக்கவில்லை.அப்படித்தான் அவர்களுடன் சந்திப்பை ஏற்படுத்திக் கொண்டாலும் அவர்கள் தாங்கள் இவற்றைச் செய்யவில்லை என்று எடுத்த எடுப்பிலேயே கூறிவிடுவார்கள்.

இந்நிலையில் மத்திய அரசில் நாம் செல்வாக்குப் பலம் உடையவர்களாக இருப்பதால் அரசுக்கு அழுத்தம் கொடுக்கவுள்ளோம். இவ்வழுத்தங்களின் மூலம் முஸ்லிம்களின் மீதான தாக்குதல் நிறுத்தப்படாது போனால் அரசுக்கான ஆதரவை நாம் விலக்கிக்கொள்வோம். அதன் மூலம் தேர்தலை நாம் சந்திக்க வேண்டி வரும் என்று மறைமுகமாக எச்சரித்த ஹக்கீம் புதிய தேர்தலில் நிபந்தனைகளுடன் கூடிய ஒப்பந்தம் செய்தே கூட்டுச் சேர்ந்து போட்டியிட வேண்டி வரும் என்றும் கூறினார்.

முஸ்லிம் மக்களுக்குப் பாதுகாப்பில்லாத அரசில் அமைச்சர் பதவியை வகித்து வாகனங்களில் ஓடித்திரிவதால் எமது மக்கள் இயல்பு வாழ்க்கையைப் பெற்றுக்கொள்ளப் போவதில்லை.

எனவே எம்முடைய மக்களின் பாதுகாப்புச் சம்பந்தமாக அரச படைகள் தெற்கில் எவ்வாறு செயற்படுகின்றனவோ அதே மாதிரியான செயற்பாடுகளை எமது பிரதேசத்திலும் செய்ய முடியாதா? என்று அமைச்சர் ஹக்கீம் கேள்வி எழுப்பினார். (ம)

## தேர்தலுக்கு...

வழங்கிய நிதி தென்பகுதிக்கு ஒரு போதும் பயன்படுத்தப்படமாட்டாது. தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் சமாதான முயற்சிகள் தொடர்வதற்கு அரசு அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்துவருகின்றது என்றும் பிரதமர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மாகாணசபைத் தேர்தலைநடத்துவதற்கு முன் கீனாவின்மூலம் கிடைத்த நிதியுதவியைப் பயன்படுத்தி நாட்டின் தென்பகுதி அபிவிருத்தி செய்யப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (வ)

## புலிகளின்...

யுற்று சம்பவ இடத்துக்குச் சென்ற பொத்துவில் பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் வீரமணி மற்றும் சக்தி மாஸ்ரர் ஆகியோர் இடைநடுவில் படையினரால் மறிக்கப்பட்டு அங்கு செல்ல விடாது தடுக்கப்பட்டுள்ளனர்.இச்சம்பவம் தொடர்பாக விடுதலைப் புலிகள் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் முறைப்பாடு செய்துள்ளனர். (த-3)

## சு.ப.தமிழ்ச்செல்வன்

விடுதலைப் புலிகளின் நிலைப்பாட்டை தமிழ்ச் செல்வன் வன்னியில் வெளியிடுவார் எனவும் தகவல் அறிந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை, பாரிஸ் பயணத்தை முடித்துக் கொண்டு வன்னி திரும்பியதும் தமிழ்ச் செல்வன்தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்களைச் சந்திப்பார் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (5-13)

## தமிழர்...

இடைக்கால நிர்வாக சபை தொடர்பான திட்டவரைபைத் தயாரிப்பதற்கு 10 பேர் கொண்ட விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர்கள் குழு நாளை செவ்வாய்க்கிழமை பாரிஸுக்கு புறப்படவிருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (வ)


## உளமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்



மேலைக்கரம்பனைப் பிறப்பிடமாகவும்,கோண்டாவில் நெட்டிலைப்பாயை வசிப்பிடமாகக் கொண்டவரும், கோண்டாவில் நெட்டிலைப்பாய்ப் பிள்ளையார் கோவில் முன்னாள் தலைவரும், இன்னாள் உபதலைவரும், நெட்டிலைப்பாய் ஸ்ரீகணேச சனசமூக நிலையத் தலைவரும், நல்லூர் பிரதேச சபை ச.ச.நிலையங்களின் சமாசத் தலைவரும்,யாழ். மாவட்ட ச.ச.நிலைய சமாசங்களின் சம்மேளனத் தலைவரும், சிறந்த சமூக சேவையாளருமான

**உயர்திரு லயன் சுப்பையா பரம்சோதி அவர்கள்**

சமாதான நீதிவானாகப் பதவியேற்றதையிட்டு அவரை உளமாரப் பாராட்டி வாழ்த்துவதுடன், அவரது சேவை மேலும் சிறப்புற இறைவனை வேண்டுகின்றோம்.

பரிபாலன சபையினர்,
கோண்டாவில் நெட்டிலைப்பாய்
பிள்ளையார் கோவில்.

(சி-6569)

## JAFFNA TECHNICAL INSTITUTE
## JAFFNA SRILANKA

REGD NO:15251 T.P:2223335

# தொழிற்பயிற்சிகள்

- **RADIO, T.V AND VIDEO DECK REPAIRING**
  சகல இன றேடியோ, ரீ.வி, டெக் மற்றும் எலக்ரோனிக் உபகரணங்கள், Computer Monitor, UPS, Printer, Scanner என்பன திருத்தும் முறை ஆரம்பத்திலிருந்து பயிற்சி அளிக்கப்படும். (காலம் 10 மாதங்கள்)
- **MOTOR REWINDING AND ELECTRICAL WIRING**
  சகல இன மோட்டார், (F)பான், ரான்ஸ்போமர்கள் றிவைன்டிங் செய்யும் முறை மற்றும் வீட்டு மின்னிணைப்பு Single Phase, Three phase இணைப்பு முறை என்பன பயிற்சி அளிக்கப்படும்.(காலம் 7மாதங்கள்)
- **MOTOR CYCLE MECHANISAM**
  சகல இன மோட்டார் சைக்கிள், நீரிறைக்கும் இயந்திரம் திருத்தும் முறை ஆரம்பத்திலிருந்து பயிற்சியளிக்கப்படும். (காலம் 6 மாதங்கள்)
- **AIR CONDITIONING AND REFRIGERATION**
  சகல இன குளிர்சாதனப் பெட்டி மற்றும் எயார் கொண்டிசன் திருத்தும் முறை ஆரம்பத்திலிருந்து பயிற்சியளிக்கப்படும். (காலம் 7 மாதங்கள்)
- **CITY AND GUILDS OF LONDON EXAM**
  1.POWER 2.ELECTRONICS

## புதிய பயிற்சிகள் ஆரம்பம்

25.08.2003 (கிழமை நாட்களில்)
24.08.2003 (சனி, ஞாயிறு நாட்களில்)
மேலதிக விபரங்களுக்கு நேரில்

11/10 B, Stanley Road,
Jaffna. (முட்டாசுக்கடைச் சந்தி)

-DIRECTOR
No-07, Palaly Road, Jaffna.

(C/6571)

## நல்லைக் குமரன் மலர் வெளியீட்டு விழா - 2003

இடம்: நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்
காலம்: 19.08.2003 செவ்வாய்க்கிழமை
காலை 9.30 மணி (புதிய நேரம்)

தலைவர்
**திரு.இ.இராமலிங்கம்**
(மாநகர ஆணையாளரும்,
சைவ சமய விவகாரக் குழுவின் தலைவரும்.)

ஆய்வுரை
**கலாநிதி செ.திருநாவுக்கரசு**
(விரிவுரையாளர், ஆசிரிய பயிற்சிக் கலாசாலை, கோப்பாய்)

மேற்படி விழாவில் பங்கு கொண்டு பயனுள்ள பல ஆக்கங்களைத் தன்னகத்தே தாங்கி வெளிவரும் நல்லைக் குமரன் மலரினைப் பெற்றுப் படித்துப் பயன்பெறுமாறு ஆர்வலர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

சைவ சமய விவகாரக் குழு
யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்.

[C/6567]


இப் பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 18.08.2003 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.